பக்கங்கள் 8

# ஈழநாடு
# The EELANAADU

50 சதம்

மலர் [illegible] சித்திரை 4 ஜ-அவ் 29 இதழ் 65
யாழ்ப்பாணம் புதன்கிழமை 16-4-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
-4-16
PERIODICALS DIVISION
LIBRARY

## எம்.பிக்களின் பதவிக்காலம் வரையறுக்கப்படும்?

[கொழும்பு]

பாராளுமன்ற அங்கத்தவர்களின் பதவிக்காலத்தை வரையறுப்பது சம்பந்தமாக ஒரு சட்ட மூலத்தைக் கொண்டுவருவதுகுறித்து அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது

12 அல்லது 15 வருடங்களுக்கு மேலாக பாராளுமன்ற அங்கத்தவராக ஒருவர் பணியாற்றுவதை புதிய சட்ட மூலம் தடைசெய்யும் என்றும், இளைய சமுதாயத்தினருக்கு இடமளிப்பதே புதிய சட்ட மூலத்தின் நோக்கமென்றும் தெரியவருகிறது.

# உருளைக்கிழங்கு இறக்குமதி தடை செய்யப்படும்?

(கொழும்பு)

**உருளைக்கிழங்கு இறக்குமதி, அடுத்த வருடம் முதல் தடை செய்யப்படவிருக்கிறது. இதுசம்பந்தமான அரசு அறிவிப்பு விரைவில் வெளிவரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.**

உருளைக்கிழங்கு இறக்குமதி காரணமாக உள்ளூர் உருளைக்கிழங்கு உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்படுவதாக அரசாங்கத்திடம் முறையிடப்பட்டதைத் தொடர்ந்தே உருளைக்கிழங்கு இறக்குமதியை நிறுத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்து முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. உள்ளூர் உருளைக்கிழங்கு உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக அரசு மேற்கொண்டிருக்கும் புதிய தீர்மானம் பற்றி விரைவில் அறிவிக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

## நாளை கூடும்

(கொழும்பு)

பிரதி வாரமும் புதன்கிழமைகளில் கூடும் அமைச்சரவை இன்று கூடமாட்டாது.

புதுவருடத்தையடுத்தே இன்று கூடுவதற்கு பதிலாக அமைச்சரவை நாளை வியாழக்கிழமை கூடும். (ம)

## ஒலிம்பிக் பகிஷ்கரிப்பு: ஜப்பானும் சேர்ந்தது

டோக்கியோ, ஏப். 15

மாஸ்கோ ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளைப் பகிஷ்கரிப்பதென்று ஜப்பானும் முடிவு செய்துள்ளது

இதுசம்பந்தமாக ஜப்பானிய வெளிநாட்டமைச்சர் நேற்று முதற்தடவையாக வெளியிட்ட கருத்தில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் ஜப்பான் கலந்துகொள்வது விரும்பத்தக்கதல்ல என்று குறிப்பிட்டார்.

ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஷ்கரிப்பது என்று அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, எகிப்து ஆகிய நாடுகள் ஏற்கனவே முடிவு செய்தது தெரிந்ததே.

## கண்டிய நடனத்துக்கு கிடைக்கும் உதவி பரதத்திற்கு இல்லையே
### எதிர்க்கட்சித் தலைவர் கவலை

(யாழ்ப்பாணம்)

கண்டிய நடனத்திற்கு கிடைக்கும் அரசாங்க உதவி தமிழ்மக்களின் பாரம்பரிய சொத்தான பரதநாட்டியத்திற்குக் கிடைப்பதில்லை.

பரதநாட்டியத்திற்கு அரசின் உதவி கிடைக்குமாயின் எமது நடனமணிகளும் உலக அரங்கில் எமது புகழைப் பரப்புவார்கள்.

எமக்கும் காலம் வரும் அப்போது எமது சிறுர்களும் எமது தமிழ் அன்னையின் புகழை பரதநாட்டியத்தின் பெருமையை சர்வதேச அரங்குகளில் சுடர்விடச் செய்வார்கள்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் கூறினர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மானிப்பாய் கலைக்கோயில் மாணவி செல்வி உஷாயினி பொன்னம்பலத்தின் பரதநாட்டிய அரங்கேற்றத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

பரதக்கலையின் சொந்தக்காரர்கள் நாம். பழம்பெரும் கலையாகிய பரதக்கலையைப் பேணிப் பாதுகாக்காது ஆபிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நடனக்கலையில் எம் மக்கள் நாட்டம் கொள்வது கவலைக்குரியது.

ஓர் இனம் பூரணத்துவம் பெற ஒரு ஆதாரமோ அன்றேல் கல்வி மட்டுமோ இருந்தால் போதாது. எமது இனம் பூரணத்துவம் பெற பாரம்பரிய சாந்தப் பரதக்

(8-ம் பக்கம் பார்க்க)

## பணயக்கைதியின் மனைவி நஷ்டஈடு கோருகிறர்

வாஷிங்டன், ஏப். 15

தெஹ்ரானிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணயக் கைதியாகவிருக்கும் திரு. வில்லியம் வெல்க்ஸ் என்பவரது மனைவி ஈரானிய அரசிடம் நூறு கோடி டாலர் நஷ்டஈடு கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

திரு வில்லியம் வெல்க் கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் தெஹ்ரானிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் ஏனைய அதிகாரிகளுடன் பணயக் கைதியாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். மேற்படி வழக்கை அமெரிக்க நீதிமன்றம் விரைவில் விசாரணைக்கெடுக்க விருக்கிறது.

## நீர்வள ஆய்வுகள்:
## மற்றுமொரு அமெரிக்க நிபுணர்குழு யாழ். விஜயம்

[யாழ்ப்பாணம்]

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு அமெரிக்க நிதிஉதவியுடன் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மூலம் நடைமுறைப் படுத்தவுள்ள சாவகச்சேரி, பருத்தித்துறை நகரசபைகளுக்கான நீர்வள ஆய்வுகளை தற்பொழுது அமெரிக்கநிபுணர்கள் திரு. றிச்சாட் கூல்தர் தலைமையில் மேற்கொண்டுவருகின்றனர்

இக்குழுவினருடன் நீர்வளச் சபை பொறியியலாளர் திரு. ரி. குணசேகரமும், நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை வட பிரதேச முகாமையாளர் திரு ச. பாலமுத்து சிங்கமும் இணைந்து நீர்வள ஆய்வுவேலைகளில் ஈடுபட்டுள்ளனர். நீர்

(8-ம் பக்கம் பார்க்க)

★ ஒன்பது மாநிலங்களின்

# சட்டசபைத் தேர்தல்திகதி நாளை அறிவிக்கப்படும்

[புதுடில்லி]

ராஷ்டிரபதி ஆட்சியிலுள்ள ஒன்பது மாநிலங்களுக்குமான சட்டசபைத் தேர்தல்கள், அடுத்த மாதம் கடைசி வாரத்தில் நடைபெறும்.

இத்தகவலை வெளியிட்ட இந்திய தலைமைத் தேர்தல் கமிஷனர் திரு. ஷக்தர், மாநில சட்ட சபைத்தேர்தல்கள் எந்தத் திகதியில் நடைபெறும் என்ற விபரம் நாளை வியாழக்கிழமை அறிவிக்கப்படும் என்று கூறினர்.

ஒன்பது மாநிலங்களிலும் சுமார் இருபது கோடி பேர், வாக்களிக்கும் உரிமைபெற்றிருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

## தாலிக்கொடி கொள்ளை!
## பொலிஸ் நாய் 'றெக்ஸ்' ஒருவரை மோப்பம் பிடித்தது

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டு தினத்தன்று அச்சுவேலியில் இடம்பெற்ற தாலிக்கொடிக் கொள்ளை சம்பந்தமாக சந்தேகத்தின்மீது ஒருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த திருமதி தாமரைச் செல்வம், சம்பவதினம் இரவு ஆலயத்திற்குச் சென்றுவிட்டு வீட்டு வெளிவிறாந்தையில் நித்திரையிலாழ்ந்திருந்த போது, வீட்டிற்கு வந்த திருடர்கள் அவரது 14 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக் கொடியை அறுத்துச் சென்றுவிட்டதாகக் காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப் பட்டிருந்தது.

இத்திருட்டு சம்பந்தமாகத் துப்புத்துலக்கும் பொருட்டு [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

## தி. மு. க-இ. காங்கிரஸுக்கு தலா 109 தொகுதிகள்

சென்னை, ஏப் 15

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் தி. மு. கழகமும், இந்திரா காங்கிரஸும் சமமான தொகுதிகளிலேயே போட்டியிடும் என்பது இப்பொழுது உறுதியாகிவிட்டது!

தொகுதிகள் தெரிவு குறித்து தி. மு கழகமும் இந்திரா காங்கிரஸும் நடத்திவந்த பேச்சுவார்த்தைகள் நேற்றுடன் முடிவடைந்தன. இக்கூட்டணியின் ஏனைய தோழமைக் கட்சிகளான நான்கு அரசியல் கட்சிகளுக்கும் பகிர்ந்து இடங்கள் ஒதுக்குவது சம்பந்தமாக நாளை பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கிறது

தமிழ்நாடு சட்ட சபையின் மொத்த ஆசனங்கள் 234 இவற்றில் தி மு கழகமும், இந்திரா காங்கிரஸும் தலா 109 தொகுதிகளில் போட்டியிடும். ஏனைய 16 தொகுதிகளிலும் இக்கூட்டணியின் தோழமைக்கட்சிகள் போட்டியிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நன்கு பராமரிக்கப்பட்ட முதல் தரமான, பருவமுள்ள கொடிமுந்திரிகை கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க நா. ஜெயசீலன், இருபாலை ரோட், கோண்டாவில். 5454

### தேவை

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் கொடுக்கலாம். தொடர்பு: 73, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7856 (5482)

ஸ்ரான்லி வீதியிலுள்ள பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலைக்கு 18 வயதுக்கு மேற்பட்ட வேலை பழகுபவர்கள், ஊதுபவர்கள், (Blowers) குமிழர் (Bubblers) மழுப்புவர்கள் (Fusers) தேவை. உடனடியாக நேரில் வரவும். பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை, 25, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 5485

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழிலை எதிர்பார்ப்பவர்களே! பாடசாலையால் வெளியேறிய மாணவர்களே! ஆறுமாதகாலத்தில் சிறந்த செய்முறைப் பயிற்சியுடன் கூடிய புதிய வகுப்புக்கள் 1-5-80ல் ஆரம்பம். எலெக்ரிக் வயறிங், வெல்டிங், மோட்டோர் மெக்கானிசம் ஆகிய வற்றில் பகல், மாலை, வார இறுதி வகுப்புகள் நடைபெற வுள்ளன. விபரங்கட்கு: Patrician Industrial Institute, 59, St. Patrick's Rd, Jaffna. 5479

## உலொறி பொடி அடித்தல்

எமது சங்கத்தின் புதிய இசுஸ் (Isuzu) உலொறிக்கு பொடி அடிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவங்களுக்கும் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் 21-4-1980 அன்று அல்லது முன்னர் கிடைக்கக் கூடியதாக பொது முகாமையாளர், பூநகரி ப. நோ. கூ. சங்கம், பூநகரி என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தபால் மூலம் தொடர்பு கொள்ள விரும்புவோர் விலாசமிடப்பட்ட முத்திரையிடப்பட்ட கடித உறையுடன் மீளளிக்கப்படாத ரூபா5-00தபால் கட்டளை செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமுகாமைய ளர்
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
பூநகரி.

5478

### "உரியநாளில் சம்பளமின்றேல்......

# சகல ஆசிரிய சங்கங்களும் போராடும் நிலை ஏற்படும்"

(யாழ்ப்பாணம்)

"வடமாகாண அதிபர்கள் சங்கம் ஆசிரியர்களின் வேதனத்தைக் கொடுப்பதில் தம் இஷ்டமாக இயங்க முற்படுவதும், தொழிற் சங்கங்களுடன் கலந்தாலோசிககாமல் இருப்பதும் வரவேற்கத்தக்கதன்று."

இலங்கை தேசிய ஆசிரியர் சங்க யாழ் மாவட்டக் கிளைச் செயலாளர் திரு. எம். குமாரசாமி, அதிபர்கள் வங்கிகளுக்குச் சென்று ஆசிரியர்களின் சம்பளப் பணத்தை எடுப்பதில்லை என முடிவு செய்தது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அரச ஊழியர்களுக்குரிய வேதனம் குறிப்பிட்ட தேதியில் அளிக்கப்பட வேண்டியது அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் ஒழுங்காகும். ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் இந்த வேதனத்தை ஆசிரியர்களிடம் காசாக ஒப்படைப்பதற்குப் பொறுப்பானவர்கள் கல்வித் திணைக்களமும் கல்லூரி அதிபர்களுமேயாவர். இந்த நியதி மாற்றப்பட்டு வேதனத்தை ஆசிரியர்களுக்கு அளிட வேறு ஏதாவது முறை மேற்கொள்ளப்பட வேண்டுமானால் இவ் விஷயத்தில் ஆசிரிய தொழிற் சங்கங்களினதும், கல்வி அமைச்சின் பிரதான கணக்காளரினதும், திறைசேரியின் உயர் உத்தியோகத்தர்களினதும் அபிப்பிராயத்தைப் பெறுவது அவசியமாகும். இவற்றைக் கைவிட்டு வடமாகாண அதிபர்கள் சங்கம் ஆசிரியர்களின் வேதனத்தை அளிப்பதில் தம்மிஷ்டமாக இயங்க முற்படுவதும், தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசியாமலிருப்பதுவும் வரவேற்கத் தக்கதன்று.

வட பகுதியிலுள்ள ஆசிரியர் எவருக்கேனும் வழமையான தேதிகளில் சம்பளம் வழங்கப்படா விட்டால் ஆசிரிய சங்கங்கள் அனைத்தும் ஒருமித்துப் போராட வேண்டிய நிலையேற்படும்.

### சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## சாக்கு விற்பனை

இச்சங்கத்தில் 6000 வெற்றுச் சாக்குவரை விற்பனைக்கிருக்கிறது. கொள்வனவு செய்ய விரும்புவோர் கேள்விகளை சங்கத்தால் வழங்கப்படும் கேள்விப்பத்திரத்தில் 21-4-80 பகல் 12-00 மணிக்குமுன் சங்கத்தில் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் மெழுகிட்ட கடித உறையில் "சாக்குக் கேள்விப் பத்திரம்" என எழுதி அனுப்ப வேண்டும். வைப்புப் பணம் ரூபா 300/-ம், கேள்விப்பத்திரப் பணம் ரூபா 5/-ம் செலுத்தி 19-4-80வரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்,

சாவகச்சேரி.
11-4-1980. 5477

## சீட்டிழுப்பு

இருபாலை நரசிங்க வைரவர் ஆலய கட்டிட நிதிக்காக 13-4-80 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்ட எண்களின் விபரம் பின்வருமாறு:

1-ம் பரிசு: 0788
2-ம் பரிசு: 0057
3-ம் பரிசு: 0526

ஐந்து ஆறுதல் பரிசில்கள்
(1) 0132 (2) 0208
(3) 0452 (4) 1129
(5) 0581

[5483]

## வளர்ந்தோர் கல்வி ஒழுங்கு படுத்துபவர்

பாடசாலை கல்வி முறையினும் மாறுபட்ட புதிய வளர்ந்தோர் கல்வியினை ஒழுங்குபடுத்துவதற்காகவும், ஆசிரியரோ சான்றிதழ்களோ இல்லாத கல்விக்குருவாக இயங்கும் சூழற் கல்வி ஒழுங்கு படுத்துபவர்.

முழு நேர வேலை, சம்பளம் திறமைக்கேற்றபடி, யாழ். மாவட்டத்தின் மேற்குப் பகுதிகளில் வேலை செய்யவேண்டும்.

**கல்வித்தகைமை**

ஆங்கிலம் பேசக்கூடியவராகவும்,
தன்னிச்சையாக இயங்கக்கூடியவராகவும்
இருத்தல் வேண்டும்.

18-4-80ல் அன்று மாலை 4 – 5 மணிக்கு
நேரில் வரவும்

OLLE HAEGGBLOM
St Antonys Lane,
OFF KEERIMALAI ROAD, PANDATERRIPPU.
5474

# "ஆசிரியசங்கங்களுடன் சேர்ந்து நடவடிக்கை"

(யாழ்ப்பாணம்)

வங்கிகளுக்குச் சென்று பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களல்லாத ஊழியர்களின் சம்பளத்தைப் பெறுவதில்லையென கல்லூரி அதிபர்கள் எடுத்த முடிவுக்கு அரசாங்க பொது வேலை தொழிலாளர் சங்க யாழ் கல்விக்கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இம்மாதம் 21-ம் தேதி அதிபர்கள் சம்பளமாற்றித் தராத பட்சத்தில் ஆசிரிய சங்கங்களோடு சேர்ந்து தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். கல்விக்கிளையின் 31-து ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கிளைத் தலைவர் திரு. க. நவரத்தினத்தினால் கொண்டுவரப்பட்டு நிறைவேறிய தீர்மானம் வருமாறு:

கல்லூரி அதிபர்கள் சிலர் கூடி பாடசாலை ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத ஊழியர்கள் பெற வேண்டிய இம்மாத சம்பளக் காசோலையை வங்கிக்குச் சென்று மாற்றிச் சம்பளம் கொடுப்பதில்லை என தீர்மானித்துள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதிபர்களின் கடமைக்கு அப்பாற்பட்ட விடயமாதலால் தாங்கள் கட்டாயமாகச் சம்பளம் மாற்றிக்கொடுக்க வேண்டிய அவசியமில்லையென இப்பிரச்னையை அணுகுகிறார்கள். இதுவிடயம் ஏற்கனவே நாம் உள்ளிட்ட பிரதிநிதிகள் கல்வி அமைச்சரோடு பேசியபோலிஸ் பாதுகாப்புடன் கடமையைச் செய்யுங்கள் என அவர்கள் வேண்டிக்கொண்டதன் பேரில் இந்நடவடிக்கை கைவிடப்பட்டது.

திரும்பவும் அவர்களுக்குக் குறிப்பிட்ட நிகழ்ச்சி சாவகச்சேரியில் நடைபெற்றதால் இப்பொழுது இத்தீர்மானத்தைப் புதுப்பித்திருக்கிறார்கள். இவ்விடயம் அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவந்து சுமுகமாக தீர்க்கவேண்டியதை ஊழியர்களை கஷ்டத்துக்குள்ளாக்கி விஷப் பரீட்சையில் ஈடுபட்டிருப்பதை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு ஆசிரியரல்லாத ஊழியர்கள் குறிப்பிட்ட கல்லூரிகளில் கடமைக்கப்பாற்பட்ட எவ்வித சேவையையும் செய்வதில்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

குறிப்பாக பாடசாலைக்குரிய பணத்தை வங்கிக்கு எடுத்துச் சென்று டிபொசிற் செய்வதும் ஏனைய காரியாலய ஒத்துழைப்புகளும் கைவிடப்படும். (க-அ)

## இன்று பொதுச் சபை

(யாழ்ப்பாணம்)

வங்கிகளுக்குச் சென்று ஆசிரியர்களின் சம்பளப் பணம் பெறுவதில்லையென்ற வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் முடிவுபற்றி இலங்கை தேசிய ஆசிரிய சங்க யாழ் மாவட்ட கிளைப் பொதுச்சபை, இன்று மாலை கூடி ஆராயவிருக்கிறது. (ஈ)

### கரவை சைவ நெறிக்கழக ஆண்டு விழா

(நெல்லியடி)

கரவை சைவநெறிக் கழகத்தின் 25வது ஆண்டுவிழா இன்று மாலை கெற்ரு விளையாட்டு மைதானத்தில் திரு. ம. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் சைவநெறிக் கழகச் சிறுவர்களின் பேச்சுப் போட்டி, கலைநிகழ்ச்சிகளும், கரவை மாதர் சங்கத்தினரின் 'மார்க்கண்டேயர்' நாடகம் என்பவனும் இடம்பெறவிருக்கின்றன.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், திருவாளர்கள் த இரத்தினம், மூ. கதிரவேலு ஆகியோர் உரையாற்றுவார். [illegible] போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்கள் வழங்குவார். (ஈ)

### ப. நோ. கூ. ச. புதிய தலைவர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராகச் சமாதான நீதவான் திரு. எஸ். கந்தையா யாழ். கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபை யாழ் கிளையின் முன்னாள் தலைவரான திரு கந்தையா முன்பும் இச்சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றியவர்.

இச்சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினர்களாக யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெகநாதன், வலிமேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. செந்தில்வடிவேல், திரு. எஸ். விசுவலிங்கம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (கு)

# இன்றைய பலன்

**சித்திரை மாதம் 4-ம்திகதி (16-4-80) புதன்கிழமை**

**மேடம்:** அன்னிய வாசம் அமைதிக்கு உலைவைக்கும் அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். தெய்வ நம்பிக்கை சிறந்த பயன் தரும்.

**இடபம்:** பேச்சு வன்மையினால் பெரும் புகழ் கிடைக்கும். பெரிய இடத்துச் சகவாசம் உங்களுக்கு செல்வாக்கைத் தேடித்தரும். வரவிலும் உயர்வு காணும் சிலருக்கு அதிர்ஷ்ட லாபமும் கிடைக்கலாம்.

**மிதுனம்:** [illegible] பூசல்கள் தோன்றி மறையும். தனிமையை விரும்புவீர்கள், தொழில் புரியும் இடத்தில் கண்துடைப்பு வேலை நடைபெறும். நண்பர்களே சூழ்ச்சி வலை விரிப்பதற்கு முற்படுவார்கள்.

**கடகம்:** வாகன சொந்தக்காரர்களுக்கு சிறப்பானதினம். ஆசிரியர்கள் வாழ்க்கையில் போற்றப்படுவார்கள். மாணவர்களாயின் கல்வித்துறையில் நல்ல முன்னேற்றமுண்டு. பொதுத்துறையிலும் நாட்டம் பிறக்கும்.

**சிங்கம்:** புத்திர வழியால் புகழ் வந்து சேரும். வெளியூர் புதினமும் உண்டு. குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும் புதிய தொடர்புகள் ஏற்படும் [illegible] மகிழ்ச்சியும் தென்படும்.

**கன்னி:** ஆயுதபீலடக்கு இடமுண்டு அவசர போக்கைத் தவிர்க்கவும். தவறான பாதையைக் காட்டுவதற்கு எதிர்கள் காத்திருப்பர். இறை நம்பிக்கையும் மனத்திடமும் வேண்டும்.

**துலாம்:** [illegible] போல் இனிக்கும் வாழ்க்கை பழமையான நினைவுகள் நெஞ்சில் அலைமோதும் [illegible] வாழ்வில் இணைப்புகள் இறுக்கமடையும். காதல் வசப்பட்டவர்களுக்கு சனிவான [illegible].

**விருட்சம்:** கோஷ்டி [illegible] டையில் உங்களையும் மாட்டி விடுவதற்குச் சிலர் முனையக் கூடும். கொடுக்கல் வாங்கல் மூலம் பகை உருவாகலாம். மேலதிகாரியின் கோபத்துக்கு இலக்காகுவீர்கள். துக்கதனம்.

**தனு:** தெய்வ பக்தி மேலிடும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். பொது மக்களின் மதிப்பும் கிட்டும் சுமுகமான நாள்.

**மகரம்:** உத்தியோக உயர்வுக்கு இடமுண்டு. சிலருக்கு புதிதாக தொழில் வாய்ப்புக்கு இடம் உண்டு. நீண்ட நாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும். செய்காபத்தில் தெய்வத்தின் துணையும் உண்டு.

**கும்பம்:** செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். செய்தொழிலிலும் விருத்தியுண்டு. உடன் பிறந்த ஒருவருக்கு மகிழ்ச்சிகரமான சம்பவமும் இடம் பெறலாம். தகுதியிலும் உயர்வுக்கு இடமுண்டு

**மீனம்:** தானிய விருத்தியில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம். விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். அதிக சிந்தனையின் மூலம் சிறிய தலையிடியும் தோன்றக்கூடும் அமைதி விரும்பத்தக்கது.

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

## "ஆசிரியர் சகாய நிதிச்சங்கத்தின் சேவை அளப்பரிது'

(அரியாலை)

ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு உதவுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட சகாய நிதிச் சங்கம் கடந்த இருபத்தைந்து வருடங்களாக ஆசிரியர் சமூகத்திற்கு அளப்பரிய உதவியைப் புரிந்துள்ளது. சந்தாப் பணமாகச் செலுத்தும் தொகை குறைவாக இருந்தாலும் அதனால் அடையும் லாபம் மிக அதிகமாக விருக்கிறது.

இவ்வாறு கிறிஸ்தவ சேவா ஆசிரியர் சகாய நிதிச்சங்கத்தின் 25 வது வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் திரு. த. சண்முகநாதன் குறிப்பிட்டார் அவர் தொடர்ந்து பேசுகையில் கடந்த வருடம் சங்கத்திலிருந்து இளைப்பாறிய 19 பேர்களுக்கு சுமார் 39 ஆயிரம் ரூபாவை சகாயமாகவும் காலஞ்சென்ற 3 பேர்களுக்கு மரணச்சகாயமாக ரூபா 6 ஆயிரத்து மேற்பட்ட தொகையையும் சங் வழங்கியுள்ளது என்றார். [ஈ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மனவலி, பரிவு, பரந்த சிந்தை, சகிப்பு, நடுநிலை தன்னடக்கம், துறவு, தியானம், அகிம்சை, நீதி முதலிய அனைத்தும் உண்மையின் வடிவங்களே.

—சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

### ஆலயத்தை வியாபார ஸ்தலமாக்காதீர்

அரசாங்கம் ஆலயங்களில் ஆடுகள் கோழிகள் என்பனவற்றைப் பலியிடுதல் சட்ட விரோதமாக்கப்பட்டதை அறிந்து சைவ அபிமானிகள் அனைவரும் முழு மனதுடன் வரவேற்கும் இந்நேரத்தில் வேள்விகள் நடத்தாததினால் நோய்கள், பெரும் தொல்லைகள் வருவதாகவும் வேள்வி நடத்த அனுமதியளிக்குமாறும் அரசாங்கத்தை மகஜர் மூலம் வடபகுதியிலுள்ள ஓர் ஆலயத்தைச் சேர்ந்தோர் கோரியிருப்பதை அறிந்து பெரிதும் வேதனைப்படுகின்றோம்.

அன்பு, இரக்கம் என்பனவற்றுக்கு உதாரணமாக விளங்கும் சைவசமயத்தின் கொள்கைகளுக்கு உயிர்ப்பலி, சாதிப் பாகுபாடு என்பன மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமாகும். இறைவன் பெயரால் பலியிடுவதை நிறுத்துங்கள்! கோவில்களை வியாபார ஸ்தலமாக்கி உயிர்ப்பலி மூலம் பொருள் சம்பாதிக்காதீர் என ஆலய முகாமையாளரை சைவத்தின் பெயரால் வேண்டுகிறோம்.

கடந்த வருடம் கைதடி ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் தேர்த்திருவிழாவின்போது ஒரு சாராரைத் தேர்வடம் பிடிக்கத் தடுத்ததினால் தேர்த்திருவிழா இடைநிறுத்தப்பட்டது. இவ்வாண்டு அத்தகைய நிலைமை ஏற்படாதவகையில் யாவரும் பங்குபற்றக் கூடியதான ஒழுங்குகள் செய்ய முன்வந்து ஏகமனதாக இம்முடிவை எடுத்துள்ளமை வரவேற்க வேண்டியதொன்றாகும்.

சைவத்தின் வளர்ச்சிக்கு இத்தகைய முயற்சி உறுதுணையாகும்.

ஆறுமுகம் கந்தையா
கைதடி

* * *

### அப்படியொரு சுற்று நிருபம் இல்லை

2-4-80 திகதி அன்று வெளியான 'ஈழநாடு' பத்திரிகை 5-ம் பக்கத்தில் அடையாள அட்டை என்னும் தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள செய்தி சலுகைக் கட்டணத்தில் புகைப்படம் எடுப்பதற்கு கிராமசேவை அலுவலர் ஸ்ருடியோவுக்குச் சிபார்சுக் கடிதம் கொடுக்காததால் கஷ்டம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போர் 18-19 வயதுக்கு உட்பட்டவராயின் 1 ரூபா 50 சதம் முத்திரையும் 19 வயதுக்கு மேற்பட்டவராயின் ரூபா 5க்கான முத்திரையுடனும் கிராமசேவை அலுவலரிடம் சென்று விண்ணப்படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்பட்டதும், படிவத்தின் முன்பக்கத்தின் அடிப்பாகத்துண்டு கிழித்து விண்ணப்பதாரரிடம் ஒப்படைக்கப்படுகின்றது. இதைவிடச் சிபார்சுக் கடிதங்கள் கொடுக்கும்படி சுற்று நிருபங்கள் எவையும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அ. பொ. புண்ணியமூர்த்தி
கி. சே. அ. கரம்பன்
கரம்பன்

## இன்று சேர் பொன். இராமநாதன் பிறந்ததினம்

# இராமநாதன் கல்வி நிறுவனங்களை பாதுகாப்பது தமிழர் கடமை

அண்மையிலே பழனிக்குச் சென்றிருந்தேன். திருமலையினுச்சியிலே வேலேந்திய இளந் திருக்கோலத்தோடு நிற்கின்ற ஆண்டவனுடைய அழகிய திருவுருவத்தைக் கண்ணாரக் கண்டு ஆயாரா வாழ்த்தினேன். "வெள்ளி மலைக் குறவன் மகன் பழனி மலைக் குறவன்" என்னும் புலவர் வாக்கு ஞாபகத்திற்கு வந்தது. வெள்ளிமலையை நினைந்து உள்ள முருகியொருகணப்பொழுது செயல் மறந்திருந்தேன். பின்பு தெற்குத் திசையை நோக்கினேன். பலப்பல குன்றுகளும் மலைத் தொடர்களும் கண்ணெதிர்ப்பட்டன. வழியின்றே சிவனடியாரொருவர் ஒரு மலையைச் சுட்டிக்காட்டி,

"அதோ தோன்றுகின்ற மலைக்கு அப்புறத்தாகிய மலையினுச்சியிலே குறிஞ்சியாண்டவனுக்கு ஒரு கோயில் அமைந்துள்ளது அவ்விடம் இருபது கல் தொலைவிலுள்ளதாயினும், ஆங்கு ஏற்றுகின்ற திருவிளக்கு இம்மலையின்றும் பார்ப்பாரது கண்ணுக்குப் புலப்படும்" என்றார். அதனைக் கேட்ட யான் அச்சிவனடியாரை நோக்கி, "அத்திருக்கோயிலை அமைத்தவர் யாவர்" என வினவினேன். அதற்கவர், "ஈழநாட்டிலே தோன்றிய இராமநாதுரையென்னும் புண்ணியவானொருவருளார். அவரை அறியாதார் தமிழ்நாட்டிலில்லை. அவரது நினைவின் வண்ணம் அப்பிரபுவினது தர்மபத்தினியாராகிய அம்மையார் ஆலய தருமத்தினை நிறைவேற்றி வைத்தார்" என விடை பகர்ந்தார். இப்பக்கை வனப்பமைந்த மலையினுச்சியிலே ஆலயத்தை அமைக்க வேண்டுமென நிச்சயித்த துரையவர்களது அறிவின் பெருக்கத்தையும், தமது நாயகர் கருதிய திருப்பணியைச் செய்து நிறைவேற்றிய அம்மையாரது அன்பின் பெருக்கத்தையும் நினைத்து, இவைதம்முள் மிக்கது அது என ஆராயத் தொடங்கினேன். அவ்வன்பும், அவ்வறிவும் ஒன்றினுக்கொன்று ஒத்த நீர்மைய எனத் துணிந்து கொண்டேன்.

திண்மையும், கொடையும், அறிவும், ஊக்கமும், விரைவுடைமையும், கல்வியுடைமையும், ஆண்மையுடைமையும் என திருவள்ளுவர் வகுத்துக் கூறிய உயர் குணங்கள் அனைத்தும் ஸ்ரீராமநாததுரையிடத்து ஒருங்கு விளங்கின வன்றோ? அம்பறிவாராய்ந்த சொல்வன்மையென அமைச்சர்க்குக் கூறிய அருங்குணங்கள் இவரிடத்து அமைந்திருந்தமையினாலே இலங்கை இராஜமந்திர சபையென்னும் குன்றின் மிசையிட்ட விளக்குப்போல இவர் என்றும் திகழ்கின்றாரன்றோ?

இவரது பெயரினைத் தமிழ் மக்கள் என்றும் மறந்தறியார். ஆதலினாலே ஸ்ரீராமநாத வித்தியாலயத்தின் வெள்ளிவிழா நாளிலே நாமிவரை நினைவு கூருகின்றோமென்றுரைப்பாரது கூற்று ஒத்து நோக்குவோருக்கு வெற்றுரையாமென்பதொருதலை. மறந்தவிடத்தன்றோ நினைப்பு நிகழ்வது. அரசியற் றுறையிலே நெருக்கடி நேரும்பொழுது "நுண்ணுணர்வும் சொல்வன்மையும் படைத்த இராமநாதரில்லையே" யென யாம் உளமெலிகின்றோம். கல்வித்துறையிலே நெருக்கடி நேரும்பொழுது "பலகலைவாணராம் வித்தியாலய நாயகருமாகிய இராமநாதர் பிரிந்தனரே" யென நாம் இரங்குகின்றோம். தமிழ் மக்களது மானத்திற்கு ஊனம் நேரும்பொழுது "உயிரினும் மானஞ் சிறந்ததெனக் கொண்ட பழந்தமிழ்மக்களின் வழித்தோன்றலாகிய இராமநாதரென்னும் வீரபுருஷர் இல்லையே" என வாட்டமடைகின்றோம்.

"ஞாயிற்றன்ன வெந்திறலாண்மையும்
திங்களன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையு"

முடையவராக இவர் வாழ்ந்தார். இவரது புகழ் என்றும் நிலவுகின்றது. இவரமைத்த வித்தியா நிலையங்களை எல்லா வழியிலும் சிறப்புறச் செய்வது செய்ந்நன்றி மறவாவியல்பினராமென உலகத்தாரால் போற்றப்படுகின்ற தமிழ்மக்கள்மேற் பொறுத்த கடனாகும்.

-- சுவாமி விபுலானந்தர் --

### பண்டத்தரிப்பு பட்டினசபை பட்ஜட்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பட்டினசபையின் இவ்வருட வரவுசெலவுத் திட்டத்தில் சபையின் மொத்த வருமானம் 5 லட்சத்து 74 ஆயிரம் ரூபா என்றும் மொத்தச் செலவு 4 லட்சத்து 60 ஆயிரம் ரூபா என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் வீதிகள் புனரமைப்பதற்கு 90 ஆயிரம் ரூபாவும், மின்சார விஸ்தரிப்புக்கு 70 ஆயிரம் ரூபாவும் இலவச பால்மா வழங்குவதற்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக பட்டினசபை விசேஷ ஆணையாளர் திரு. எம். மயில்வாகனம் தெரிவித்தார். (ச)

### காசி, விசுவநாதரை இந்திராகாந்தி தரிசித்தார்

(வாரணாசி)

காசி விசாலாட்சி, அன்னபூரணி, விசுவாநாதர் சுவாமி கோவில்களுக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி திடீரென கடந்த 4ம் திகதி வெள்ளிக்கிழமை விஜயத்தை மேற் கொண்டு தரிசனம் செய்தார்.

முப்படையினரும் (காசியில்) வாரணாசி சகல வீதிகளிலும் ரோந்து காவல் செய்தனர். பிற்பகல் 4-மணி முதல் இரவு 7 மணிவரை காசி விசுவநாதர் கோவிலுக்குப் பொது மக்கள் போகமுடியாது தடை செய்யப்பட்டனர். வீதிகள், கடைகள் பலவர்ண மின்சார தீபத்தாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன.

இந்தியப் பிரதமர் மிகவும் சுறுசுறுப்பாக நடந்துவந்து "சப்தரிஷிகள்," அபிஷேகத்தையும் கண்டு "விசுவநாதர் தரிசனையையும்" மிகபயபக்தியுடன் செய்தார்கள்.

பெருந்திரளான மக்கள் எல்லாவீதிகளிலும் நின்று கரகோஷித்து வணக்கம் செய்து கொண்டார்கள். இரவு 8 மணிக்கே அவர்கள் சகல கோவில் தரிசனைகளையும் நிறைவுசெய்து கொண்டு சென்றார். அதன் பின்னரே பக்தர்கள் தரிசனைக்கு அனுமதிக்கப்பட்டனர்

"திருமதி இந்திராகாந்திக்கு ஜே" என்று கோசித்தவாறு மக்கள் வீதிகளிலும் கடையோரங்களிலும் பெருந்திரளாக நின்றார்கள்

மகிழ்ச்சியில் பலர் பூக்களை வாங்கி எறிந்தும் மகிழ்ச்சிப் பிரவாகத்தைக் காட்டினார்கள்.

(கு.வி. மகாலிங்கம்: வாரணாசியிலிருந்து எழுதியது.)

## "குழந்தைக் கவிதைத்துறையில் தமிழகத்துக்குப் பின்னிற்கிறோம்"

### எதிர்க்கட்சி முதல்வர் கவலை

(சித்தன்கேணி)

"தொண்டர் சந்தசாமி குழந்தைகளுக்கென ஓர் இலக்கியம் படைத்திருக்கிறார். வளர்ந்தோர்களுக்குப் பாடல்படைப்பது மிகவும் சுலபம். ஆனால் குழந்தைகளுக்குக் கவிதை படைப்பது மிகமிகக் கஷ்டமானது, தமிழகத்திலே அழ. வள்ளியப்பா முதலான குழந்தைக் கவிஞர்கள் பலர் இருக்கின்றனர். குழந்தைக் கவிதையைப் பொறுத்தவரை நமது நாடு தமிழகத்திற்குப் பின்னிற்பதை யாரும் மறுக்கமுடியாது. இருந்தும் தொண்டர் கந்தசாமியின்" குழந்தைக்குரல் கவிதைத் தொகுதியிலுள்ள படைப்புகள் முன்மாதிரியாக அமைந்துள்ளன."

சங்கானை சிலம்புப்புளியடி வைரவகோவில்முன்றலில் சங்கானை இந்து இளைஞர் மன்றச் சார்பில் "குழந்தைக் குரல்" கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா இளைப்பாறிய அரசாங்க அதிபர் திரு. செ. சிவஞானம் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக் கலந்து கொண்டு மங்கல விளக்கேற்றி வைத்து உரைநிகழ்த்திய எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டதாவது: தொண்டர் கந்தசாமிக்கும் எமக்கும் அரசியலில் கருத்துவேறுபாடு இருந்த போதிலும் அவரது தூய்மையான தொண்டினை நான் நன்கு மதிக்கின்றேன். நினைத்ததைச் சாதிக்கும் ஆற்றல் படைத்த இவர் காந்திய நெறியில் சாதி, சமய அமைப்பை நீக்கி எல்லோரும் சமத்துவமாக வாழவழி வகுத்து வருகின்றார். [illegible] தொடரவேண்டும். இக்குழந்தைக்குரல் மாணவர்கள் எல்லோரது கரங்களிலும் திகழ வேண்டும் இவரது இலக்கிய சேவைக்கு எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும்" என்றார்.

சங்கானை இந்து இளைஞர் மன்றத்தலைவர் திரு மு. நேசரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

வட்டு: எம். பி. திரு. நா. திருநாவுக்கரசு பேசும்போது, "தொண்டர் கந்தசாமியின் இடையறாத ஊக்கத்தினாலேயே சங்கானை மகாவித்தியாலயத்திற்கு மேல்மாடிக் கட்டடம் கிடைத்தது. சந்தைக் கட்டடமும் தொண்டரின் தளராத ஊக்கத்தின் பயனாகவே கிடைத்துள்ளது. இவர் புனிதமான சமூகப்பணிகளுடன் குழந்தை இலக்கியத்தினையும் படைத்து ஒரு சிறந்த சாதனையை நிறைவேற்றியிருக்கிறார்" என்றார்.

மாவை சேனாதிராசா, சச்சி ஏ. முருகேசு உட்பட மற்றும் பலரும் பேசினர். (ஈ)

## மட்டக்களப்பு, அம்பாறையில் செல்வா பிறந்த நாள்

(மட்டக்களப்பு)

அமரர் தந்தை செல்வாவின் 83 வது பிறந்தநாள் விழா மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை தமிழ் இளைஞர் பேரவையினர் மேற்கொண்டுள்ளனர்.

இம்மாதம் 17ந்திகதி மாலை அம்பாறைமாவட்ட கிளையினரால் கல்முனை அன்னைவேளாங்கன்னி ஆலய மைதானத்தில் இவ்வைபவம் திரு. மூ. குலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு நகரமண்டபத்தில் 19ந் திகதி பேரவை அமைப்பாளர் திரு இராவாசுதேவா தலைமையில் செல்வா பிறந்தநாள் விழா கொண்டாடப்படும்.

இவ்வைபவங்களில் எதிர்க்கட்சி தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி. திரு மு. சிவசிதம்பரம், பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம், திரு காசிஆனந்தன், மாவை சேனாதிராசா, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், வணபிதா யோசேப்மேரி, யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் உட்பட பலகூட்டணி எம். பீக்கள் பிரமுககர்கள், பேரவை உறுப்பினர்கள் கலந்து கொள்வர்.

செல்வாவின் பிறந்த தினம் இதற்கு முன்பு மட்டக்களப்பில் சில வருடங்களுக்கு முன்னரே கொண்டாடப்பட்டது. (இ)

### நவக்கிரக பிரதிஷ்டை

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற்ற மண்டலாபிஷேகத்தை அடுத்து கடந்த வாரம் நவக்கிரகங்கள் புதிதாகப் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது. பிரம்மஸ்ரீ சாமி விசுவநாதக் குருக்கள் தலைமையில் நவக்கிரக பிரதிஷ்டா வைபவம் நடைபெற்றது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்புத்துறைக் கலாசாலைக் கட்டிடம் யாழ். ஆயரிடம் ஒப்படைக்கப்படும்?

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை யாழ்மேற்றிராசனத்திடம் கையளிக்கப்ப விருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த சில மாதங்களாக எது விதமுடிவும் இல்லாத நிலையில் மூடப்பட்டுக் கிடந்த கலாசாலையை சில மாதகளுக்கு முன் இராணுவ முகாமாக்குவதற்கு மேலிடத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாயினும் யாழ். எம். பி, திரு வெ யோகேஸ்வரன் எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் ஆகியோரும ஜனதிபதியிடம் ஆட்சேபம் தெரிவித்திருந்தது தெரிந்ததே

இக்கலாசாலையை அரசாங்கத்திடம் கையளிக்கும் போது செய்து கொண்ட உடன் பாட்டின்படி கல்வித் தேவைக்காகப் பாவிக்கப்படாவிடின் இக் கட்டிடங்களை மீண்டும் தமது நிர்வாகத்திடம் கையளிக்குமாறு யாழ். ஆயர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார். (அ)

## நெற்களஞ்சியம் நிரம்பியது

(மன்னர்)

மன்னர் மாவட்டத்தில் உள்ள நெற்களஞ்சியங்கள் நிரம்பி வழிகிறது. இதனால் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் நெல்லை தற்போது சிறந்த வெளிக்களஞ்சியங்களில் சேமிக்கப்பட்டு வருகிறது

திறந்த வெளிக் களஞ்சியங்களில் சேமித்துவைக்கப்பட்டுள்ள நெல் தகுந்த பாதுகாப்புடனேயே வைக்கப்பட்டுள்ளது. (கு)





உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற கமத்தொழில் சேவைத் திணைக்களத்தின் கோப்பாய் தொகுதி விவசாயிகள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தொகுதி எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்கிறார் இவருக்கு அருகே யாழ். கமத்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளரும் விழாத் தலைவருமான திரு. எஸ் சிவமுத்துலிங்கம் காணப்படுகிறார். இரண்டாவது படத்தில் இவ் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் பேசிக்கொண்டிருப்பதைக் காணலாம், இளைஞர் விவசாயக் கழகப் போஷகர் திரு. அ. த. க. கிருஷ்ணராஜா, வடபிராந்திய பயிர்க் காப்புறுதிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவகுரு ஆகியோரும் மேடையில் காணப்படுகின்றனர்.

## பெரியமடுவில் விளையாட்டரங்கு

[மன்னர்]

பெரியமடு குடியேற்றத் திட்டத்தில் மன்னர் தேசிய இளைஞர் மன்றத்தினர் 10 ஆயிரம் ரூபா செலவில் விளையாட்டரங்கோன்றையும், வீதியொன்றையும் அமைத்துவருகின்றனர்.

இப்பணியில் பெரியமடுவை சேர்ந்த 65 இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர் மன்னர் தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலர் திரு. ஆறுமுகம் இப்பணியை ஆரம்பித்து வைத்தார். (கு)

## பத்திரிகைகளுக்கு தொலைபேசி முன்னுரிமை

[கொழும்பு]

சர்வதேச மகாநாடு ஒன்று நடைபெறுமபோது உள்ளூர் பத்திரிகைகளுக்கு ஏற்கனவே வழங்கப்படும் 3ம் தர தொலைபேசி முன்னுரிமையை சாதாரண வேளைகளிலும் மூலஅழைப்புகளுக்கு உள்ளூர்ப் பத்திரிகைகள் பெற்றுக்கொள்ளலாம் என்றும் இதுபற்றி தொலைபேசித் திணைக்களத்திற்கு மேலும் அறிவுறுத்தப்படும் என்றும் தபால்தந்தி பிரதி அமைச்சர் திரு பிலட்பிட்டியா பாராளுமன்றத்தில் யாழ். எம். பி. திரு வி. யோகேஸ்வரனின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் கூறினர். [ -இ]

## டாக்டரின் வீடுடைத்துத் திருட்டு

(பண்டத்தரிப்பு)

வெளிநாட்டில் வேலை பார்க்கும் டாக்டர் ஒருவரின் வீட்டின் கதவை உடைத்து இரவு வேளையில் திருடப்பட்ட மூவாயிரம் ரூபா பெறுமதியான இரும்புப் பெட்டி உடைக்கப்பட்ட நிலையில் சுதுமலையிலுள்ள ஒரு குளத்தில் மீட்கப்பட்டுள்ளது.

உடுவில் வாசியான டாக்டர் பசேந்திரன் என்பவர் தற்போது அமெரிக்காவில் டாக்டராக வேலை பார்க்கிறார். இவரது பூட்டிக் கிடந்த வீட்டிற்குள் கடந்த வாரம் இரவு வேளையில் கதவை உடைத்து திருடர்கள் அங்கிருந்த மூவாயிரம் ரூபா பெறுமதியான இரும்புப்பெட்டியையும் வேறு சில பொருட்களையும் திருடிச் சென்றனராம் ஆனால் இரும்புப் பெட்டியில் பணம் இருக்கவில்லை இது பற்றிச் சுன்னகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

புதுவருடத்தினத்தன்று சுதுமலையிலுள்ள குளத்தில் பிரஸ்தாப இரும்புப் பெட்டி அநாதரவான நிலையில் கிடப்பதாகக் கிடைத்தசெய்தியைத் தொடர்ந்து சுன்னகம் பொலிசாரின் உதவியுடன் அது மீட்கப் பட்டது. பெட்டியின் கைப்பிடியை மட்டும் திருடர் எடுத்துச்சென்றுவிட்டனராம். இச்சம்பவம் பற்றிபொலிசார் விசாரணையில் ஈடுபட்டுவருகின்றனர். (அ)

## சுவீப்முடிவுகள்

(கொழும்பு)

கிரிபத்கொடவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 774-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு

**21 P 0349**

ரூபா 1, 00, 000

இரண்டாவது பரிசு

**02 G 0202**

ரூபா 40, 000

மூன்றாவது பரிசு

**16 Q 0755**

ரூபா 10, 000

தலா 1,815 ரூபா ஆறுதல் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் விபர வருமாறு:-

| | |
|---|---|
| 32 A 0484 | 33 A 0484 |
| 01 B 0317 | 02 B 0881 |
| 24 B 0549 | 25 B 0095 |
| 32 B 0776 | 34 B 0666 |
| 02 C 0041 | 02 C 0118 |
| 06 C 0352 | 10 C 0019 |
| 26 C 0330 | 06 D 0431 |
| 09 D 0563 | 24 D 0641 |
| 31 D 0536 | 22 E 0830 |
| 27 E 0562 | 32 E 0383 |
| 34 E 0116 | 02 F 0487 |
| 05 F 0285 | 09 F 0927 |
| 2 F 0242 | 23 F 0925 |
| 30 F 0767 | 32 F 0846 |
| 03 G 0864 | 07 G 0750 |
| 5 G 0887 | 30 G 0689 |
| 33 G 0417 | 33 G 0729 |
| 04 H 0239 | 21 H 0560 |
| 23 H 0157 | 27 H 0323 |
| 27 H 0586 | 30 H 0421 |
| 01 J 0144 | 12 J 0852 |
| 13 J 0128 | 17 J 0231 |
| 19 J 0051 | 22 J 0533 |
| 12 K 0212 | 18 K 0468 |
| 22 K 0078 | 08 L 0139 |
| 09 L 0593 | |
| 03 M 0385 | 05 M 0176 |
| 19 M 0329 | 21 M 0963 |
| 27 M 0418 | 08 N 00 4 |
| 18 N 0834 | 22 N 0869 |
| 27 N 0139 | 32 N 0024 |
| 33 N 0466 | 09 O 0450 |
| 01 P 0555 | 27 Q 0904 |
| 07 R 0404 | 24 R 0081 |
| 29 R 0234 | 31 R 0636 |
| 01 S 0862 | 16 S 0260 |
| 29 S 0106 | 07 T 0544 |
| 1 T 0285 | 23 T 0958 |
| 13 U 0670 | 23 U 0177 |
| 17 V 0929 | 19 V 0810 |
| 34 V 00 6 | 34 V 0396 |
| 12 W 0 53 | 13 W 0296 |
| 14 W 0243 | 28 W 0691 |
| 29 W 0559 | 31 W 0652 |
| 05 X 0325 | 17 X 0912 |
| 15 X 0597 | 26 X 0261 |
| 32 X 0681 | 13 Y 0339 |
| 17 Y 0612 | |
| 28 Y 0940 | 08 Z 0870 |
| 09 Z 0746 | 10 Z 0857 |
| 23 Z 0606 | 29 Z 0322 |

இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## புத்தாண்டு தினத்தில் வாழ்க்கையை முடித்தார்

[மாவிட்டபுரம்]

புத்தாண்டு தினத்தில் நஞ்சு அருந்தி ஒருவர் மரணத்தைத் தழுவிக்கொண்டார், தெல்லிப்பழையைச் சேர்ந்த அருளம்பலம் இராஜகோபாலன் [33 வயது] என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்திய சமயம் காலமானவர் மல்லாகம் கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் காவலாளியாகக் கடமை புரிந்துவருபவரெனவும் கடமையை ஒழுங்காகச் செய்யாத காரணத்தால் அபிவிருத்தி சபை முகாமையாளர் இவரை பலமுறை கண்டித்திருந்ததாவும், புத்தாண்டு தினத்தில் அளவுக்கதிகமாக மது அருந்திபின் கிருமிநாசினியுடன் முகாமையாளர் முன் சென்று அதனை அருந்தியதாகவும், உடன் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குமரணமானதாகவும் சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டது. மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

சுன்னகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சிறீசுந்தரம் மரண விசாரணைக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். [அ]

## பரு.மக்கள் குடிநீர்ப்பிரச்னை: நிரந்தரத் தீர்வு ஏற்படும்

### குழாய்நீர்த் திட்டத்துக்கு ரூ. 3 கோடி அமெரிக்க உதவி

(புலோலி)

பருத்தித்துறை நகரசபைப் பகுதி மக்களின் குடிநீர்ப்பிரச்னையை நீக்கி அவர்களுக்கு குடிநீர்வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக வடமராட்சி கிழக்குப் பகுதியான பணத்காட்டிலிருந்து குழாய் நீர் விநியோகத்திட்டமொன்று அமெரிக்காவின் உதவியினல் 3 கோடி ரூபா செலவில் மேற்கொள்வதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பருத்திததுறை எம். பி திரு. கே. துரைரத்தினம் தெரிவித்தார்.

இத் திட்டத்தைத் துரிதமாக மேற்கொண்டு இப்பகுதிகளுக்கு குழாய்நீரை வழங்குவதுபற்றி ஆராய்வதற்கென அமெரிக்க நீர்வல உயிரியல் ஆராய்ச்சியாளரான திரு ரெய்லர் கடந்தவாரம் பருத்தித்துறைக்கு வந்து பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் ஆகியோருடன் ஆராய்ச்சியொன்றை மேற்கொண்டார்.

இவ்வாராய்ச்சியின் பின் மணற்காடு தொடக்கம் பருத்தித்துறை வரையுள்ள கடற்கரைப் பகுதிகளில் உள்ள நன்னீருக்கு தட்டுப்பாடு ஏற்படுமாகையால் இப்பகுதிகளில் மணல் கடத்தப்படுவது தடை செய்யப்படவேண்டும் என்றும் இங்குள்ள மரங்கள் வெட்டப்படுவது தடை செய்யப்பட்டு புதிய மரவளர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு. ரெயிலர் ஆலோசனை வழங்கினர்.

இதற்கிணங்க இப்பகுதிகளில் உள்ள மரங்கள் தறிக்கப்படுவதற்கும், கரையோரப் பகுதிகளில் உள்ள மணல் கடத்தப்படுவதற்கும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மணல் கடத்தப்படுவதைத் தடைசெய்யுமுகமாக மணல் அள்ளுவதற்கான பொறுப்பை பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கும், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்த எம். பி. திரு. துரைரத்தினம், பருத்தித்துறைத் தொகுதியில் மரவளர்ப்புத் திட்டத்தின்கீழ் 2000 ஏக்கர் நிலத்தில் மரங்கள் நாட்டப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## சிறுபிரச்னை மோதலாக மாறியது

[மாவிட்டபுரம்]

அச்சுவேலியில் கடையொன்றில் ஏற்பட்ட சிறு பிரச்னை மோதலாக வளர்ந்து கடை உடைத்து நொறுக்கப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டுள்ளனர்

அச்சுவேலிச் சந்தியில் உள்ள எஸ். கணேசன் என்பவரது கடைக்குச்சென்ற சிலர் அவருடன் சிறு பிரச்னை ஏற்பட்டதையடுத்து கடையிலிருந்த போத்தல்களையும் மற்றும் தளபாடங்களையும் அடித்துநொறுக்கியதாகவும், இதனையடுத்து மோதல் வளர்ந்து பலர் தாக்குதலுக்குள்ளானதாகவும் கூறப்படுகிறது.

இத்தாக்குதலில் தமக்கு 2500 ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கடைச் சொந்தக்காரர் காங்கேசன் துறைப்பொலிசில் புகார் செய்துள்ளார். இச்சம்பவத்தில் படுகாயமடைந்த அச்சுவேலியைச் சேர்ந்த வி. பாலசோதி ஆர் ஆனந்தராசா ஆகியோர் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகிறது. காங்கேசன்துறைப் பொலிசார் இத்தாக்குதல் குறித்து புலன்விசாரணை செய்து வருகின்றனர். (அ)

## சூசைதாசன் நாடு திரும்பினர்

(மன்னர்)

டில்லியில் பொதுநல அமைப்பு நாடுகள் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட மன்னர் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் நாடு திரும்பினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மேலைநாடுகளின் முன்னேற்றத்திற்கு கடமை உணர்வே காரணம்"

[கோண்டாவில்]

ஒவ்வொருவரும் தாம் [illegible] செய்கின்ற தொழிலில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் [illegible] வேண்டும் இன்று மேலைநாடுகள் அபிவிருத்தியடைந்து முன்னேறியதற்கு இதுவே காரணமாகும்'' யாழ்ப்பாணம் பல்தொழில் நுட்பநிலையத்தில் தொழில் மாணவ மன்றத்தினரால் நடாத்தப்பட்ட தேநீர்விருந்துபசாரவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மாநகர முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொழில் மாணவ மன்றத் தலைவர் திரு. இ. இராகவன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. விசுவநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''நாங்கள் சீனாவுக்கு மேற்கொண்டவிஜயத்தின்பொழுது கொழும்பு மாநகரசபை முதல்வரின் கடிகாரம் திருத்துவதற்காக மணிக்கூடு திருத்தும் கடைக்குச் சென்றோம். அங்கு தொழில் தேர்ச்சியுள்ள ஒருவர் மாத்திரம் எம்முடன் கதைத்தார். மற்றவர்கள் நாங்கள் பிறதேசத்திலிருந்து வந்திருக்கின்றோம் என்றுகூட யோசியாது தமது வேலையிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

இந்நிலைதான் அவர்களை முப்பது வருடகாலத்தில் மிகவும் பிரமிக்கத்தக்கவகையில் அபிவிருத்தியடைய காரணமாக இருந்தது எனலாம்.

ஒவ்வொருவரிடமும் நாட்டுப்பற்றும் தொழிற்பற்றும் இருத்தலவேண்டும். இன்று தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பல பிரச்னையை வேலைரீதியாக எதிர்நோக்குகின்றார்கள். இன்றுபல பல பயிற்சிநெறிகளையும் முடித்துக்கொண்டு வெளியேறும் மாணவர்களின் நிலைமை பற்றி நல்லூர், யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்கூறி வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பேன்.

வெளிநாடுகளில் தொழில் கிராக்கி உண்டு இதன்காரணமாக எமது இளைஞர்கள் வெளியேறிக் கொண்டு இருக்கின்றார்கள் சிங்கப்பூரில் திறமைக்கு முதலிடம் அளிக்கப்படுகின்றது. ஆனால் இங்கு இந்நிலை இல்லை. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே பரஸ்பர ஒற்றுமை காணப்பட வேண்டியது அத்தியவசியம் ஆகும் என்றார்.

அகில இலங்கை தொழில் நுட்ப மாணவமன்ற உபதலைவரும் உயர் வணிக மாணவ மன்றத்தலைவருமான திரு ந. நவரத்தினராசா பேசுகையில் எமது நிறுவனத்தில் மாணவர்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை. கடந்த எட்டுவருடங்களுக்கு மேலாக எந்த ஒரு அரசியல் பிரமுகர்களும் எமது நிறுவனத்திற்கு வரவில்லை. இவ்வாறு அழைப்பதற்கு எமது நிர்வாகம் அனுமதி வழங்கவும் இல்லை. இன்று தொழில் மாணவமன்றம் ஒரு அரசியல் பிரமுகரை அழைத்ததை இட்டு இவர்களைப் பாராட்டுகின்றேன்.

1961-ம் ஆண்டு இடைநிறுத்தப்பட்ட பொது மாணவ மன்றங்கள் சகல தொழில் நுட்ப நிறுவனங்களிலும் இயங்குகின்ற போதிலும் எமது நிறுவனத்தில் மட்டும் தான் இயங்கவில்லை. இந்நிலையில் எமக்கு ஒரு பொதுவான மாணவ மன்றத்தை அமைக்க அடுத்த தவணையிலாவது வழி செய்து தர வேண்டும் என்றார்.

மற்றும் உபஅதிபர் இராஜேந்திரா குழந்தைவேலு நகுலேசன் ஆகியோரும் உரையாற்றினர். (ஈ)

## விரிவுரையாளர் போதாதாம்

[கோண்டாவில்]

விரிவுரையாளர்கள் பற்றாக்குறை பற்றி யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதுபற்றி யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரி உயர் பிரிவு மாணவர்கள் அவருடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

''யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரி உயர்பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பயிற்சி தொடங்கி ஒரு மாதகாலமாகியும் நிரந்தரமான விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படவில்லை. இதே நேரத்தில் அங்கு கடமையாற்றுகின்ற சில விரிவுரையாளர்களே தொடர்ந்து எல்லாப் பாடங்களையும் ஓய்வின்றிப் போதித்து வருகின்றனர்'' என்று இவர்கள் சமர்ப்பித்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளனர். [அ]

—...

## சதாவதானி நினைவு விழா

(புலோலி)

புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 73வது ஆண்டு நினைவு விழா நாளை வியாழக்கிழமை சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் திரு. செ. அருச்சுனு தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி தெற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு மு. தம்பிமுத்து தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பருத்தித்துறை நகரசபை அங்கத்தவரும் ஆசிரியருமான திரு. சிவா. கிருஷ்ணமூர்த்தி, யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. சிவராசா ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

அத்துடன் பண்டிதர் வி. பரந்தாமன் தலைமையிலான கவியரங்கம், யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி அ. சண்முகதாஸ் தலைமையிலான [illegible] [illegible] நிகழ்ச்சுகளும் [illegible] [illegible] அ

# கோஷ்டிச் சண்டையில் 7 பேர் படுகாயம்

## பன்னாலையில் சம்பவம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழையை யடுத்த பன்னாலையில் இடம் பெற்ற கோஷ்டிச்சண்டை யொன்றில் 7 பேர் பலத்தகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழையை யடுத்த பன்னாலையில் கிணறொன்றில தண்ணீர் அள்ளுவது தொடர்பாக ஏற்பட்ட பிரச்னை பின்னர் கோஷ்டிச்சண்டையாக மாறியதாம் இதில் உலக்கை பொல்லுகள் கற்கள் என்பன உபயோகிக்கப்பட்டதாம்.

இதில் வைத்திலிங்கம் காசிலிங்கம் வைத்திலிங்கம் கனகலிங்கம், மா. கந்தசாமிப்பிள்ளை சே. கணபதிப்பிள்ளை சணபதிப்பிள்ளை நவமணி கதிரேசு சுந்தரமூர்த்தி வைரமுத்து கனகசபாபதி ஆகிய ஏழு பேர் படுகாயமடைந்து தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

காங்கேசன்துறைப் பொலிசார் இதுதொடர்பாக விசாரணை செய்து வருகின்றனர். ] அ]

வீடுடைத்துக் கொள்ளை:

# தந்தையும் மகனும் பிணையில் விடப்பட்டனர்

[மாவிட்டபுரம்]

கொல்லங்கலட்டி வீடுடைப்புக் கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதான தந்தையும் தனயனும் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த மூத்ததம்பி சரவணமுத்து என்பவரது வீடு உடைக்கப்பட்டு அங்கிருந்த நகைகள் சைக்கிள் உட்பட 27 ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான பொருட்கள் அண்மையில் கொள்ளையடிக்கப்பட்டன.

இதுதொடர்பாக விசாரணை செய்த காங்கேசன்துறை பொலிசார் சந்தேகத்தின் பேரில் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த சண்முகம் கந்தசாமி என்பவரையும் அவரது மகன் ரவீந்திரனையும் கைது செய்தனர்.

விசாரணையில் பின் ரவீந்திரன் என்பவரைப் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்த பொலிசார், அவரது தந்தையை மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஆர் ஜெ செவரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

அச்சமயம் அவர் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

## வலைகள் திருட்டு

[மாவிட்டபுரம்]

வள்ளத்தில் வைக்கப்பட்டிருந்த 10 மீன்பிடி வலைகள் திரும்பி வந்து பார்த்தபோது திருட்டுப்போய்விட்டதாம்.

மயிலிட்டியைச் சேர்ந்த ஏ. சிவனடியார் என்பவருக்குச் சொந்தமான இவ்வலைகளின் பெறுமதி 3500 ரூபாவாம்.

கடற்கரையில் நின்ற தமது வள்ளத்தில் இவ்வலைகளை வைத்துவிட்டு வீட்டுக்குத் தாம் சென்றதாகவும் சில மணிநேரத்தில் திரும்பி வந்தபோது அவை திருட்டுப்போயிருந்ததாகவும், காங்கேசன் துறைப் பொலிசில் சிவனடியார் புகார்செய்துள்ளார். [அ]

## 'சகூரினபீச்' அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(சித்தன்கேணி)

வடபகுதிக்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் அதிகம் விரும்பும் காரைநகரிலுள்ள 'கசூரினபீச்' அபிவிருத்தி செய்யப்பட விருக்கிறது.

வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 'சகூரினபீச்'சில் சவுக்கு மரங்களை [illegible] ஒதுக்கியுள்ளனர். (அ)

தொகுதி ஒதுக்கீடு

# வழிகாட்டு முறைகளை திமுக செயற்குழு தயாரித்துள்ளது

சென்னை, ஏப். 15

தமிழக சட்டசபைத் தேர்தலில் தி மு க - இந்திரா காங்கிரஸ் தொகுதி ஒதுக்கீட்டுக்கு வழிகாட்டுமுறைகளை தி.மு.க செயற்குழு தயாரித்துள்ளது.

செயற்குழுவினால் தயாரிக்கப்பட்ட இவ்வழிகாட்டு முறைகளின் அடிப்படையில் தொகுதி ஒதுக்கீடு குறித்து இந்திராகாங்கிரஸ் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக தி.மு.க தலைவர் திரு. மு. கருணாநிதி நிருபர்களிடம் தெரிவித்தார்.

செயற்குழுக் கூட்டம் நடைபெற்றமையால் தமிழகத்தில் தங்கியிருந்த நிதியமைச்சர் வெங்கட்ராமனைச் சந்திக்க முடியவில்லையென்றும் இன்று அல்லது நாளை சந்திக்க உள்ளதாகவும் திரு. கருணாநிதி கூறினார். (இ)

பாஷையூர்

# மீனவர் குடியேற்றத்திற்கு துண்டியில் காணி கையேற்பு

[யாழ்ப்பாணம்]

கடற்றொழில் செய்யும் மக்களின் தேவைகளை நிறைவேற்றி அவர்களின் கஷ்டங்களை ஓரளவுக்கு நீக்குவதற்கு கடற்றொழில் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்படி யாழ் மாவட்டத்தில் பாஷையூர் மக்களின் தேவைக்காகத் துண்டிப்பகுதியில் உள்ள யாழ் மேற்றிராசனத்தைச் சேர்ந்த கிளாலி பங்கிற்குச் சொந்தமான காணியை அரசாங்கம் கையேற்று 25 வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறது.

இதற்கான அடிக்கல்நாட்டு விழா விரைவில் நடைபெற உள்ளது.

இதுபோன்று ஆழியவளை, உடுத்துறை, நாகர்கோவில் போன்ற பகுதிகளிலும் வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த வீடுகள் ஒவ்வொன்றையும் அமைப்பதற்கு கிட்டத்தட்ட 23 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் வரை செலவாகும் எனத் தெரியவருகிறது. (வி-அ)

கணேசலிங்கம் கொலைமுயற்சி:

# சந்தேக நபர்களுக்குத் தொடர்ந்து றிமாண்ட்

(புலோலி)

வடபிரதேச ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு கணேசலிங்கத்தை துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ய முயன்ற சம்பவம் தொடர்பான சந்தேகநபர்கள் இருவரையும் தொடர்ந்தும் இம் மாதம் 25ந் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் உத்தரவிட்டுள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்லச்சாமி குமார், தனபாலசிங்கம் விஜயசிங்கம் ஆகிய இரு சந்தேகநபர்களும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் மீண்டும் கடந்த வெள்ளிக்கிழமை ஆஜர் செய்யப்பட்டனர். நீதவான் தொடர்ந்தும் சந்தேக நபர்கள் இருவரையும் இம் மாதம் 25ந் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான கே. கே. பாலசுப்பிரமணியம், சிவஞானசுந்தரம் ஆகியோர் ஆஜராகினர். (அ)

## புதிய பஸ் சேவை

(புளியங்குளம்)

புதிய பஸ் சேவை தறிகட்டகுளம் வழியாகமாறு இலுப்பைஉரை நடைபெறவுள்ளது இதற்கென நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். பாலசுந்தரம் தலைமையில் வேலன்குளம், குளவிசுட்டான், மாறு இலுப்பை ஆகிய கிராம அபிவிருத்திச்சபைகள் சிரமதான மூலம் பாதையைச் செப்பனிட்டுள்ளன.

இதற்கான பரீட்சார்த்த பஸ் சேவை அண்மையில் முல்லைத்தீவு இ.போ.ச. அத்தியட்சர் தலைமையில் நடைபெற்றது. விரைவில் இப் புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்படலாமெனத் தெரியவருகிறது. (அ)

## சாந்தையில் 50 வீடுகள்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதியில் மாதிரிக் கிராமமாக தெரிவு செய்யப்பட்டுள்ள சாந்தை கிராமத்தில் சுய உதவி வீடமைப்புத்திட்டத்தின் கீழ் 50 வீடுகளை நிறுவுவதற்கு யாழ். தேசிய வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இவ் வீடுகளைப் பெறத்தகுதியான 50 வீடற்ற மக்களின் பெயர்ப்பட்டியலை தமக்கு சிபார்சு செய்து அனுப்பி வைக்குமாறு சபையின் முகாமையாளர் வட்டுக்கோட்டை எம். பி திரு. தா. திருநாவுக்கரசுவை கேட்டுள்ளார். (கு)

## பண்டத்தரிப்பு நகரவட்டாரம் அழகுபெறும்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புச் சந்தியில் 52 ஆயிரம் ரூபா செலவில் புதிய சுற்றுவட்டம் அமைக்கப்பட்டுள்ளது. போதுமராமத்து நெடுஞ்சாலைகள் திணைக்களத்தால் நிறுவப்பட்டுள்ள இச்சுற்று வட்டத்தில் பூச்செடிகளை நாட்டி நகரை அழகுபடுத்துவதற்கு பண்டத்தரிப்புப் பட்டினசபை விசேட ஆணையாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (அ)

## இ. சேவை அலுவலரை தாக்கினாராம்

(மன்னார்)

அடையாள அட்டைப் படப்பிடிப்புச் சம்பந்தமான வேலைகளை முடித்துக் காண்டு காரியாலயம் திரும்பிய மூசலிப் பகுதிக் கிராமசேவை அலுவலரை இருவர் இடைவழியில் தாக்கினார்களென முசலிப் பகுதிக் கிராமசேவை அலுவலர் புகார்செய்துள்ளார். காரியாலயப் பொருட்களுக்கும் சேதமேற்பட்டுள்ளதாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈரானைத் தாக்க அமெரிக்கா படைகளைத்தயார்செய்கிறது

## தெஹ்ரான் விமான நிலையத்தை கைப்பற்ற முதலில் திட்டம்

### 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் தகவல்

மாஸ்கோ, ஏப்ரல் 15

ஈரானைத் தாக்குவதற்கு அமெரிக்கா படையொன்றைத் தயாரித்து வருகின்றது.

தெஹ்ரான் விமானநிலையத்தைக் கைப்பற்றுவது ஈரானிய எல்லைக்குள் ஹெலிகொப்டர்களை இறக்குவது ஆகிய இந் நடவடிக்கைகளையுமே அமெரிக்கா உடனடியாக மேற்கொள்ள இருக்கிறது.

இத் தகவல்களை சோவியத் யூனியனின் உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபனமான "டாஸ்" தெரிவித்துள்ளது.

பணயக்கைதிகளை மீட்பதற்கான மாற்றுத் திட்டங்களை அமெரிக்கா வகுத்துவிட்டதென்றும் இத் திட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் மேற்கு ஜெர்மன் பத்திரிகை ஒன்றை ஆதாரம் காட்டி 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் மேலும் தெரிவித்தது. (இ)

# ஆபிரிக்காவும் அரேபியாவும் விலகி வருகின்றன

## கடல் ஆராய்ச்சியில் கண்டு பிடிப்பு

மாஸ்கோ, ஏப்ரல் 15

ஆபிரிக்காவும் அராபிய தீபகற்பமும் லட்சோபலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வெடித்துப் பிரிந்துபோயின என்ற இதுவரை கூறப்பட்ட கருத்தினை அண்மையில் மேற்கொள்ளப்பட்ட செங்கடல் ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன.

ஆண்டொன்றுக்கு ஆபிரிக்காவும் அராபிய தீபகற்பமும் சராசரி 100 மில்லி மீட்டர் அளவில் விலகி வருகின்றன என்றும் இந்த ஆராய்ச்சியின்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சமுத்திரவியல் ஆராய்ச்சியாளர்கள் குழுவொன்று செங்கடலின் 2030 மீட்டர் ஆழத்தில் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டபோதே இவ் விபரங்கள் தெரியவந்தள்ளன.

# தமிழகத்தில் எதிர்க்கட்சி ஐக்கிய முன்னணி

## எம். ஜி. ஆர்- – அர்ஸ் சந்திப்பு

சென்னை, ஏப்ரல் 15

எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் இந்திராகாங்கிரஸ் தி. மு. க. கூட்டணிக்கு எதிராக எதிர்க்கட்சி ஐக்கியமுன்னணி ஒன்றை அமைப்பது குறித்து அ. தி. மு. க. - ஜனதா - இந்திய தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சித் தலைவர்கள் பேச்சு வார்த்தை நடத்திவருகின்றனர்.

இந்த ஐக்கியமுன்னணியை அமைப்பது குறித்து அ. தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும் இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. தேவராஜ் அர்ஸும் நேற்று சந்தித்து பேச்சு நடத்தினர்.

இதேவேளையில் அ. தி. மு. க. - ஜனதா கூட்டணியினருடன் தொகுதி உடன்பாடு குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் பேச்சு நடத்த தமிழ்நாடு இந்திய தேசியகாங்கிரஸ் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று திரு. தேவராஜ் அர்ஸ் கூறினர். (இ)

# துறவப்பெண்ணின் வயிற்றில் குழந்தையின் சங்கிலி

## மருதடியில் திருடப்பட்டதாம்

(யாழ்ப்பாணம்)

மருதடி விநாயகர் ஆலய தேர்த்திருவிழாவின் போது திருடப்பட்டதாகக் கருதப்படும் சங்கிலி ஒன்று குறவர் இனத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவரின் வயிற்றில் இருப்பது 'எக்ஸ்றே' மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வருடப்பிறப்பன்று மருதடி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற ரதோற்சவத்தைப் பார்வையிடுவதற்காகத் தனது பெண் குழந்தையுடன் பேற்படி ஆலயத்திற்குச் சென்ற தந்தை ஒருவர் கடை ஒன்றிற்குப் பக்கத்தில் தனது குழந்தையை விட்டுவிட்டுக் கடையில் சாமான் வாங்கினாராம். அப்போது அவ்விடத்தில் நின்ற குறவர் இனச் சிறுமி ஒருவர் குழந்தையின் கழுத்தில் இருந்த 'பென்டன்' சங்கிலியை அறுத்தாராம். குழந்தையின் அழுகுரல் கேட்டு அங்கே வந்த தந்தையார் குழந்தையின் கழுத்தில் இருந்த சங்கிலியுடன் குறவர் இனச்சிறுமி ஓடுவதைக் கண்டு துரத்திச் சென்று அச்சிறுமியைப் பிடித்தபோது அவர் பென்டனையும் சங்கிலியையும் தனது வாய்க்குள் போட்டு விழுங்கி விட்டாராம்.

ஆலயத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசாரிடம் அச்சிறுமி ஒப்படைக்கப்பட்டுப் பின் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு எக்ஸ்ரே எடுக்கப்பட்டபோது அவரின் வயிற்றில் பென்டன் சங்கிலி இருப்பது எக்ஸ்றே மூலம் தெரியவந்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

அச்சிறுமி ஆஸ்பத்திரியில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டைப் பொலிஸ் சார்ஜன்ட் டில்லன் துரை இத்திருட்டு சம்பந்தமாக புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளார். (கொ-இ)

# ஹரிஜனர்களுக்கு கவர்னர் விருந்து

சென்னை, ஏப்ரல் 15

இந்திய ஹரிஜனத் தலைவர் டாக்டர் பி. ஆர். அம்பேத்காரின் 89வது பிறந்ததின விழாவையொட்டி நேற்று பல ஹரிஜனர்களுக்கு சென்னை ராஜ்பசபையில் தமிழக கவர்னர் திரு. பிரபுதாஸ்பட்வாரி விருந்தளித்தார். (இ)

......

# பஸ் விபத்து: நால்வர் பலி!

திருச்சி, ஏப். 15

திருச்சி பூனம்பாளையத்தில் நடைபெற்ற பஸ் விபத்து ஒன்றில் 4 பேர் பலியாகினர் என்றும், 20 பேர் படுகாயம் அடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. [இ]

......

# தி. மு.க. வில் சேர்ந்தனர்

சென்னை. ஏப். 15

மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களான திரு. கே. அழகிரிசாமி, திரு. நெல்லை மாறன் ஆகியோர் அ. தி. மு. கவிலிருந்து தி. மு. கவில் சேர்ந்துள்ளனர் [இ]

# ஒலிம்பிக் போட்டிகளை எகிப்து பகிஷ்கரிக்கும்

கெய்ரோ, ஏப்ரல் 15

சோவியத்யூனியனில் இவ்வாண்டு நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஷ்கரிப்பதென்று எகிப்தும் தீர்மானித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் சோவியத்யூனியன் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஷ்கரிப்பதென்று எகிப்து ஒலிம்பிக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கெய்ரோ செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒலிம்பிக் போட்டிகளை பகிஷ்கரிப்பதென்று அமெரிக்கா, மேற்கு ஜெர்மன் ஆகிய நாடுகள் ஏற்கனவே தீர்மானித்துள்ளது தெரிந்ததே. [இ]

# ஆப்கானில் 600 சோவியத் வீரர்களை கிளர்ச்சிக்காரர்கள் கொன்றனர்

காபூல், ஏப்.15

ஆப்கானிஸ்தான் வட பகுதியில் திடீர்தாக்குதல் நடத்திய கிளர்ச்சிக்காரர்கள் 600 சோவியத் படை வீரர்களைக் கொலை செய்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

300 கவச வாகனங்களில் சுரங்கநகர் ஒன்றை நோக்கிச் சென்ற போதே கிளர்ச்சிக்காரர்களின் குண்டுகளுக்கு சோவியத்வீரர்கள் பலியாகினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது 40 கவச வண்டிகள் மண்ணில் புதைந்தன என்றும் கிளர்ச்சிக்காரர்கள் தெரிவித்தனர். (இ)

# தி. மு. க. தலைவர் கருணாநிதி

தலைசிறந்த தலைவர்

மிகச்சிறந்த அரசியல்வாதி

முதல் அமைச்சர் பதவிக்கு உரியவர்

# தமிழகத்தின் முதல்வர் யார்என்பது தேர்தலுக்குப் பின்னரே தெரியும்

## நிதி அமைச்சர் வெங்கட்ராமன் கருத்து

சென்னை, ஏப். 15

தி மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தலைசிறந்த தலைவர்- மிகச்சிறந்த அரசியல்வாதி- தமிழகத்தின் முதலமைச்சர் பதவியில் அமர்வதற்கு மிகவும் தகுதியானவர்.



திரு. கருணாநிதி மட்டுமல்ல, தமிழகத்தின் முதலமைச்சர் பதவியை வகிக்கக்கூடிய வேறு பலரும் இருக்கிறார்கள்

இந்நிலையில் இந்திரா காங்கிரஸ் தி மு.க கூட்டணி அடுத்த தமிழக [illegible] வெற்றிபெற்றால் யார் [illegible] என்று தர்க்கம்புரிவதில் அர்த்தமில்லை.

ஜனநாயக அமைப்பின் படி, இதுபோன்று கூட்டணிக்கட்சிகள் தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் வெற்றிபெற்ற பின்னரே முதல்வரைத் தெரிவுசெய்வது வழமை, அதைவிடுத்து இப்போதிருந்தே வீண் சர்ச்சையை வளர்ப்பதில் அர்த்தமில்லை.

இவ்வாறு இந்திராகாங்கிரஸ் [illegible] உறுப்பினரும் மத்திய நிதி அமைச்சருமான திரு. ஆர். வெங்கட்ராமன் சென்னையில் தெரிவித்தார்.

தி. மு. க. - இந்திரா காங்கிரஸ் கூட்டணி தேர்தலுக்காக மட்டுமல்ல தொடர்ந்தும் இயங்கும் என்றும் திரு. வெங்கட்ராமன் கூறினர்.

தமிழக சட்டசபைத்தேர்தல் அடுத்தமாதம் இறுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் கூறினர். (இ)

# இந்தியாவில் புதிய கம்யூனிஸ்ட் கட்சி

புதுடில்லி, ஏட். 15

இந்தியாவில் அகில பாரத கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் புதிய கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# மண் சரிவுக்கு 13 பேர் பலி

புதுடில்லி, ஏப் 15

மத்தியப்பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவுக்கு 13 பேர் பலியாகினர் என்றும், 6 பேர் தெய்வாதீனமாக மீட்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

# புத்தாண்டில் 7 கொலைகள்

(கொழும்பு)

புத்தாண்டு தினத்தில் இவ்வாண்டு ஏழு கொலைச்சம்பவங்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமைக்காரியாலயம் அறிவித்துள்ளது.

12, 13ம் திகதிகளில் நாடு முழுவதும் அசம்பாவித சம்பவங்கள் மிகக் குறைவாகவே நடைபெற்றுள்ளதாகவும் கடந்த ஆண்டு புத்தாண்டு தினக் கொண்டாட்டங்களின் போது 23 கொலைகளும் 1978ம்ஆண்டு 38 கொலைகளும் இடம் பெற்றன என்றும் பொலிஸ் தலைமைக்காரியாலயம் தெரிவித்தது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்ஸ் (கல்லுகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - சுஜாதா
தீ ப ம்
(கலர் - புதியபிரதி)

வெல்லி மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-லதா
ஊருக்கு
உழைப்பவன்
(புதிய பிரதி)

## எதிர்க்கட்சித் தலைவரைச் சந்திப்பர்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு ஊழியர் குறைபாடுகள் சம்பந்தமாகக் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக் காரியாலயத்தில் இம்மாதம் 19ந் திகதி காலை எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கத்தை பேட்டி காணவிருக்கிறது. (ச)

5th CROWDED WEEK
REGAL JAFFNA Phone 380
Daily 4 shows
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m.
ROGER MOORE as JAMES BOND
LIVE AND LET DIE
(More suited for Adults)

ராஜா - (யாழ்நகர்) கடைசி 2 தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] 10-30, 2-30 6-30, 9-30
சிவாஜி-சரோஜாதேவி- எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

லிடோ தினசரி 10-30, 2-30, 4-45, 7-15 & 9-30
(யாழ். நகர்) போன்: 7698
DIAMONDS

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த் மலேசியா சிவாஜி ராஜா, டீன்குமார்
நடித்த
நெஞ்சுக்கு நீதி
இது ஒரு இலங்கை - இந்திய - மலேசிய கூட்டுத் தயாரிப்பு

மனோஹரா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை
(ஈஸ்ட்மன் கலர்—புதிய பிரதி)

வின்ஸர் தொலைபேசி: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
தினசரி 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறுத பூக்கள்
(வண்ணப்படம்)

இன்னும் சில தினங்கள் மட்டும்
சாந்தி யாழ் நகர் போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
ராஜேஷ் கன்னா (இரட்டைவேடம்), சர்மிலாதாகூர்
"டாஹ்" ஹிந்தி
ஈஸ்ட்மன் கலர்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயசந்திரன்
தர்மலிங்கம்-டிங்கிரி கனகரத்தினம்-V. R. ஸ்ரீ நடராஜா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன் : ஜோ தேவ் ஆனந்த்

## தந்தை செல்வா நினைவுதின விழா

[யாழ்ப்பாணம்]

தந்தை செல்வா நினைவுதினக் கூட்டம் உரும்பராய் கற்பகப் பிள்ளையார் கோவில் வீதியில் இம்மாதம் 20ம் தேதி நடைபெறவிருக்கிறது.

திரு. க. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் உரைநிகழ்த்துவார்கள். [க]

## இந்துமகாசபையினர் சமயச் சுற்றுலா

[இணுவில்]

இணுவில் இந்துமகா சபையினர் தென்னிந்தியாவில் சமயச் சுற்றுலா ஒன்றை இன்று மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இணுவில் சிவகாமி அம்பாள் கோவிலிருந்து இணுவில் இந்து மகாசபைச் செயலாளர் திரு தி சி. சண்முகலிங்கம் தலைமையில் செல்லும் இக்கோஷ்டியில் 50 பேர் செல்லவிருக்கின்றனர். இக்கோஷ்டியுடன் இணுவில் கி. மு. ச. தலைவா தரு. ... இலகுநாதன் தலைமையிலும் ஒருகுழு இணைந்து செல்லவிருக்கிறது. [ச]

மகாவலி

## சிரமதானப்பணி ஆலோசனைக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

சிறுபான்மைத் தமிழர் விடுதலைமுன்னணியின் மகாவலி சிரமதானப் பணிக்கான கூட்டம் இன்று பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

சிரமதானப்பணிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு விடுதலைமுன்னணிப் பொதுச்செயலாளர் திரு.எம்.எஸ். அலெக்ஸாண்டர் சிரமதானப்பணி சம்பந்தமாக ஆலோசனை வழங்குவார். [ஈ]

## ஆலயத்தில் திருட்டு

(பண்டத்தரிப்பு)

உடுவில் சங்க உடையார் பிள்ளையார் கோவிலில் இரவு வேளையில் ஓட்டைப்பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்த பிள்ளையார் விக்கிரகத்தைப் புரட்டிவிட்டு அதற்கு அடியில் வைக்கப்பட்டிருந்த யந்திர தகடுகளையும், ஐம்பொன்னையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இக்கோவிலிலுள்ள முருகன் மீதிருந்த வெள்ளியினால் செய்யப்பட்ட வேலையும், அம்மன் மீதிருந்த தாலியையும், பொட்டையும் திருடிச் சென்றுள்ளனர்.

இத்துணிகரத் திருட்டுச் சம்பவம் பற்றி சுன்னாகப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸ் கோஷ்டியொன்று ஸ்தலத்திற்கு சென்று தீவிர விசாரணை நடாத்தியது. (ஒ)

## மீன்பிடித் துறைமுகம்

(மன்னார்)

மன்னாரில் அமைக்கப்பட்டு வரும் மீன்பிடித் துறைமுக வேலைகள் தொடர்ந்து நடைபெற மன்னார் மாவட்ட அமைச்சர் ஜனாப் எம். ஈ எச். மஹ்றூப் நடவடிக்கை எடுத்துள்ளார். அபுதாபியின் உதவியுடன் இம் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட்டு வருகிறது. [கு]

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்
(இரு வேடம்)
பட்டிக்காட்டு ராஜா

மின்னொளியில்

## கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி

(பலாலி)

வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் நடாத்தும் அமரர் செல்லப்பா குமாரசாமி ஞாபகார்த்தக் கேடயத்திற்கான மின்னொளி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டங்கள்

ஒவர்-கேம 6வீரர் ஆட்டத்தில் தட்டாதெரு, கலாஜோதி வி. க. த்தை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் 'ஏ' வி.க வும், ஆவரங்கால், ஐக்கிய வி. க. வை எதிர்த்து மானிப்பாய் ஆனந்த 'ஏ' வி. க வும் போட்டியிடும்.

இவ்விரு போட்டிகளிலும் தெரிவு செய்யப்படும் இரு கோஷ்டிகளும் மீண்டும் இரவு 9-00 மணிப் போட்டியில் கலந்து கொள்ளும்.

ஒவர்-கேம் 6வீரர் போட்டியல் உரும்பராய், புனித மிக்கேல் வி க. வை எதிர்த்து உடுப்பிட்டி, சிவகுமரன் 'ஏ' வி. க. வும், சுன்னாகம், காந்தி ரூபன் வி க. த்தை எதிர்த்து ஏழாலை, கலாநிதி வி. க. வும் போட்டியிடும். ... களில் தெரிவாகும் இருகோஷ்டிகளும் இரவு 9-30 மணிப் போட்டியில் போதும்.

செந்-அப் ஆட்டத்தில் வவுனியா, விவேகானந்தா வி. க வை எதிர்த்து மட்டுவில், வி. கவும், யாழ்ப்பாணம் - சிங்கள மகாவித்தியாலய வி. கவை எதிர்த்து மட்டுவில், சோலைதாய 'பி' பிரிவு வி. கவும் போட்டியிடும். (ச)

ஃ ஃ ஃ

(சச்சுலேலி)

நடேசர் கலைசமூக நிலைய மின்னொளி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 6பேர் ஆட்டத்தில் காங்கேசன் துறை ஐக்கிய வி. கவுடன் உடுப்பிட்டி உதயசூரியன் வி.க வும் சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி வி. கவுடன் நீர்வேலி ஐக்கிய வி. க. 'பி' பிரிவு சிறுப்பிட்டி தெற்கு சிறுவையூர் மக்கள் வி. க. 'ஏ' பிரிவுடன் நீர்வேலி, ஐக்கிய வி. ச. ஏ பிரிவும் மோதுகின்றன.

4பேர் ஆட்டம் நீர்வேலி ஐக்கிய வி. க. ஏயுடன் உடுப்பிட்டி, உதயசூரியன் வி. க. பி பிரிவும் நீர்வேலி வடக்கு சிவசக்தி வி. க ஏ பிரிவுடன் காங்கேசன்துறை ஐக்கிய வி. க. வும் நீர்வேலி ஐக்கிய வி. க பி பிரிவுடன் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி. க. ஏ பிரிவும் மோதுகின்றன. (சாவ. நி. ச.)

## 'மிஷனரிகளின்சேவையினால் நாடு உன்னதமானது'

(அரியாலை)

18ம் நூற்றாண்டிலே மேலைத் தேசங்களில் இருந்து கிறீஸ்தவ மிஷனறிகள் வருகையினால் தான் கிறீஸ்தவ மதம் வந்தது. அவர்களினால் நம் நாட்டில் இன்று இயங்கி வரும் கல்லூரிகள், வைத்தியசாலைகள், ஆலயங்கள் அமைக்கப்பட்டன. அவர்களின் தன்னலமற்ற சேவைகளினால் இவைகள் மிகவும் திறம்பட நடாத்தப்பட்டு வந்துள்ளன. அவர்களின் சேவை நன்றி கூறற்பாலது''.

இவ்வாறு யாழ். பரியோவான் ஆலயத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணத் திருச்சபை சுவிசேஷ சங்கத்தின் 41வது வருட நன்றி தெரிவிக்கும் ஆராதனையில் அருளுரை நிகழ்த்திய அருட். திரு ஜெயந்திலகராசா அடிகளார் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு சாம். டி. ஹோரார் சிங்டன் அடிகளாரின் தலைமையில் அருட்திரு. யோண். ஐசாயா அடிகளாரால் நடாத்தப்பட்ட மேற்பட்ட ஆராதனையில் அருட்திரு. ஜெயந்திலகராசா அடிகளார் தொடர்ந்து பேசுகையில் சுவிசேஷ சங்கங்கள் நல்ல நோக்கத்துடன் அமைக்கப்பட்ட பொழுதிலும் அவைகள் இன்று கொண்டிருக்கும் மனப்போக்கினால் தமது பணியைத் திறம்பட நடாத்த முடியாமல் இருக்கின்றன. இன்னும் உலகில் பல கோடிக் கணக்கான மக்கள் கிறிஸ்துவை அறியாதவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் மத்தியில் கிறீஸ்துவைப் பற்றிய செய்திகள் எடுத்துச் செல்லப்படவேண்டும். இன்று எமது கீழைத் தேய நாடுகளிலிருந்து இந்து சமயம், பௌத்த சமயம் போன்றவை அவைகளின் மிஷனரிகள் மூலம் மேலைத் தேய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவைகளின் தத்துவங்கள் மேலைத்தேய நாட்டவர்களுக்கு விளக்கப்படுகின்றன. என்று குறிப்பிட்டார். (ச)

## இளைஞர் ஆணைக்குழுவின் பயிற்சி

[யாழ்ப்பாணம்]

திருமலை—மட்டுநகர் இளைஞர் ஆணைக்குழுவின் முதலாவது இளைஞர் மகாநாடும் தலைமைத்துவ பயிற்சி முகாமும் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி நூலக மண்டபத்தில் அருட்திரு சற்குணநாயகம் அடிகள் தலைமையில் அண்மையில் நடைபெற்றது

அருட்திரு போல் அடிகளுடன் சேர்ந்து யாழ். மறைமாவட்டத்தின் பலபகுதிகளையும் சேர்ந்த இளைஞர்களும். யுவதிகளும் ஒருங்கிணைந்து குத்துவிளக்கேற்றி கருத்தரங்கை ஆரம்பித்தனர்.

முதல்நாள் கருத்தரங்கில் இவ்வியக்கத்தின் விருதுவாக்கியமாகிய "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" பற்றி இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அன்றையதினம் குழுக்களாக இளைஞர்களும் யுவதிகளும் பிரிக்கப்பட்டு அறிமுகம் குழுப் பயிற்சிமூலம் சிறப்பாக நடாத்தப்பட்டது. இப்பயிற்சியில் "ராஜாராணி அலங்காரம்" எனும் புதுவகையான உளவியல் முறை மூலம் இளைஞரிடை அறிமுகம் நடாத்தப்பட்டது.

இரண்டாம் நாள் பயிற்சி முகாமில் தன்னம்பிக்கை பற்றிய உரையாடலும், பாட்டுக்குப் பாட்டு, ஆக்கபூர்வ செயல் பாட்டு காட்சி விளக்கம் போன்ற உளவியல் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கருத்தரங்கின் முடிவில் கருத்தரங்கில் பங்குபற்றிய அனைவர்க்கும் அருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை சான்றிதழ்கள் மட்டுநகர் திருமலை ஆயரின் கையெழுத்துடன் வழங்கினர். [கி-த]

## ஞானஒடுக்கம்

(சாவகச்சேரி)

கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான ஞானஒடுக்கம் மிருசுவில் புனித நீக்கிலஸ் தேவாலயத்தில் நடைபெற்றது. ஞானஒடுக்க தியான உரைகளை அமலமரி தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு ஞானப்பிரகாசம் அடிகளார் வழங்கினர். இந்த ஞானஒடுக்கம் மிருசுவில் பங்குத் தந்தை அருட்திரு.ஜே.ஏ பிரான்சிஸ் அடிகளாரால் ஒழுங்கு செய்யப்பட்டது. (ச)

## விதைப்பு

(சாவகச்சேரி)

மிருசுவில் தெற்கு மாதர் முன்னேற்றச் சங்கத்தினர் தங்களது முதலாவது அபிவிருத்தித் திட்டமாக மிருசுவில் பகுதியைச் சேர்ந்த நுணுவில் வயல் வெளியில் சிறுதானிய விதைப்பை ஆரம்பித்துள்ளனர் இதற்கான ஏற்பாடுகளை மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதிமே. மி யோசப் கவனித்து வருகின்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷார்ப் போட்டோ கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)

சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.

SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.
(சுன்னாகம் மக்கள் வங்கி முன்பாக)

ஈழநாடு The EELANAADU
50 சதம்

# ஸாம்பியா அதிபர் இந்தியா விஜயம்

புதுடில்லி, ஏப், 15

ஸாம்பிய அதிபர் டாக்டர் கென்னத் கௌண்டா நேற்று புதுடில்லி வந்து சேர்ந்த போது அவருக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

ஸாம்பியா அதிபரைக் கௌரவிக்கும் முகமாக ராஷ்டிரபதி டாக்டர் நீலம் சஞ்சீவ ரெட்டி நேற்றிரவு விருந்தளித்தார்.

# சங்கிலி மீட்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

சிறுமியின் வயிற்றில் இருந்த பென்டன் சங்கிலி, நேற்று வெளிக்கொணரப்பட்டது

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தேர்த் திருவிழாவின் போது ஆலயத்தில் நின்ற சுதுமலையைச் சேர்ந்த முருகேசு பாலசுப்பிரமணியத்தின் குழந்தையின் கழுத்திலிருந்த பென்டன் சங்கிலியை அறுத்துக்கொண்டோடிய குறச்சிறுமியை துரத்திப்பிடித்தபோது, குறச்சிறுமி பென்டன் சங்கிலியை வாய்க்குள் விழுங்கியதை அடுத்து, மேற்படி சிறுமி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஆஸ்பத்திரி மூலம் குறச் சிறுமிக்குப் பேதி கொடுக்கப்பட்டு பென்ரன் சங்கிலி வெளியே எடுக்கப்பட்டுள்ளது. [முன்வந்த செய்தி 6ம் பக்கம்]

[கொ]

# இன்றும் நாளையும் நடைபெறும் சதுரங்கம் பற்றிய விரிவுரைகள்

## சோவியத் பேராசிரியர் நிகழ்த்துகிறார்

சதுரங்க விளையாட்டு பண்டைய காலத்தில் பாரத நாட்டு மன்னர்களால் பேணி வளர்க்கப்பட்டது பொதுமக்கள் மத்தியில் இது அவ்வளவு பரவியதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் மதிநுட்பம் இல்லாதவர்களால் திறம்பட ஆட முடியாதென்பதே எனப் பலரும் கூறுவர்.

மதிநுட்பம் என்பது அரச குடும்பத்தினருக்கு ஏகபோக உரிமையல்ல, அது பொதுமக்களிடமும் தாராளமாக உள்ளது என்பதை நிரூபித்த சோவியத் நாட்டுச் சமதர்மவாதிகள் இன்று சதுரங்க விளையாட்டை பொதுமக்களிடம் சரளமாகப் பரப்பியுள்ளனர். அத்துடன் சர்வதேச சதுரங்க விளையாட்டில் சோவியத் நாட்டை முதலிடம் பெறவும் செய்துள்ளனர்.

சதுரங்க விளையாட்டு வீரம் நிறைந்த நேர்மையான ஒரு யுத்தகளத்தை ஒத்ததாகும், நேர்மையான யுத்தத்தில் மாற்று மன்னனை சதி செய்து கொல்வதோ வீழ்த்துவதோ இல்லை. முன்னறிவித்தல் கொடுத்து ஆரம்பிக்கப்படும் யுத்தத்தில் எதிரிக்கு சமசந்தர்ப்பமும் வாய்ப்பும் கொடுக்கப்படும் எதிராளி அரசனை உயிருடன் சிறைப்படுத்தலே வீர யுத்தத்தின் இலட்சியமாகும் சதுரங்க விளையாட்டிலும் அரசனைச் சிறைப்படுத்தலே முக்கிய நோக்கமாகும்.

சதுரங்கத்தை தமிழ் நாட்டில் அரசு என வழங்கினர். அரசு விளையாட்டும் சதுரங்கமும் ஒன்றாகும்.

மனதை ஒருமுகப்படுத்தி அவதானிக்கும் ஆற்றல் சதுரங்க விளையாட்டிற்கு மிகவும் முக்கியமாகும் மாணவர்களுடைய விவேகத்தையும் விழிப்புணர்வையும் விருத்தி செய்யக் கூடிய சிறந்த உள்ளக விளையாட்டு சதுரங்கமாகும். இதில் குருட்டு அதிர்ட்டத்துக்கோ கீழ்த்தரமான சூதுவாதுகளுக்கோ இடமில்லை. சதுரங்க வீரர்கள் தமது மன ஆற்றலை விருத்தி செய்வதுடன் சுய கட்டுப்பாட்டையும் சுயமுயற்சியையும் முன்னேறச் செய்கின்றனர். இதனால் பிறர் கையேந்தி வாழும் தன்மை இயல்பாகவே குறைந்துவிடுகிறது. இத்தகைய பண்புகளை வளர்க்கும் சதுரங்க விளையாட்டை மாணவர்களிடையே பழகிப் பரவச் செய்தல் உபயோகமுடையதாகும்.

நா. செல்லையா
(யாழ் சதுரங்கழகத் தலைவர்)

இத்துறையில் யாழ் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் முதலிடம் வகிக்கின்றது. மற்றும் கல்லூரிகள் இன்னும் இதில் அக்கறை கொண்டு வெற்றியீட்டுவதாக புலப்படவில்லை. விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்ட ரீதியிலும் அகில இலங்கை ரீதியிலும் ஸ்ரீலங்கா சதுரங்கச் சம்மேளனத்தினர் வருடாவருடம் போட்டிகளை நடத்தி பரிசில்களை நல்கிவருகின்றனர். அகில உலக ரீதியிலும் பல நாடுகளுக்கிடையே சதுரங்கப் போட்டி நடாத்தப்பட்டுவருகிறது. இப்போட்டியில் முதல் பரிசாக ஐம்பது லட்சம் ரூபாய்களுக்கு மேலாக வழங்கப்படுதல் ஆச்சரியப்படத்தக்க உண்மையாகும்.

இலங்கையில் மாணவர்களிடையே நடாத்தப்படும் போட்டியில் யாழ். மாணவர்களுக்கு வேண்டிய விவேகமிருந்தும் போதிய பயிற்சிபெறும் வசதியின்மையால் அதிக வெற்றி கிடைப்பதில்லை. இக்குறையை ஓரளவு நிவர்த்தி செய்யும் பொருட்டு யாழ். சதுரங்கக் கழகத்தினர் சோவியத் சதுரங்கப் பேராசிரியர் வை. வசுய்கோவை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துள்ளனர்.

அவர் இன்று யாழ். இந்துக் கல்லூரியில் காலை 8-30 க்கும் பிற்பகல் 3-00 க்கும் விரிவுரை நடாத்துவார்.

நாளை பரி. யோவான் கல்லூரியில் காலை 8-30 க்கு விரிவுரைகள் நடாத்துவார்.

இவற்றில் கலந்துகொள்ள விரும்புவோர் வரவேற்கப்படுகின்றனர். (வரும்போது சதுரங்க காய்களை கொண்டுவரவும்)

# இன்று மாநாடு

(யாழ்ப்பாணம்)

உயிரின வாயு சம்பந்தமான மாநாடு ஒன்றை இன்று யாழ் மாநகரசபையின் செயற்குழு அறையில் யாழ் மாநகர முதல்வர் இராசா விசுவநாதன் நடத்துகின்றார்.

இம்மாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த ஆலோசக நிபுணரான திரு. வெபர் கலந்துகொள்ளுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ். முதல்வர் இராசா விசுவநாதனின் [illegible] பொறுப்பாளர் திரு. [illegible] மாநாட்டில் கலந்துகொள்ளுகிறார்.

எரிபொருள் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்கான வழிமுறைகளில் உயிரின வாயுவின் பிரயோகமும், அதன் பயோகமும் மாநாட்டில் விரிவாக அலசப்படும் என அறியப்படுகிறது. வெகு விரைவில் உயிரின வாயுவின் பிரயோகம் யாழ். நகரில் அறிமுகப்படுத்தப்படுமென்றும் அதன் பயோகம் நன்கு பரப்பப்படும் வகையில் விரிவான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுமெனவும் எதிர்பார்க்கலாம். (கொ)

## கண்டிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலையை நாம் பேணிக் காக்க வேண்டும்.

பெரும் நல்[illegible]யும் மேதைகளையும் கல்வி மான்களையும் உருவாக்கிய, மானிப்பாயைச் சேர்ந்த செல்வி உஷாயினி தமது திறமையினால் எமது புகழை மேலும் பரப்புவார் என்பதில் சந்தேகமில்லை.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

விஞ்ஞான உலகில் நாம் இன்று வாழ்ந்து வருகிறோம். எந்த வாழ்வுக்கு விஞ்ஞானமே அத்தியாவசியமாக இருக்கிறது. அந்த விஞ்ஞானத்தால் மட்டும் ஓரினம் பூரணத்துவம் அடைந்துவிடமுடியாது. இனம் பூரணத்துவம் அடைய அந்த இனத்தின் கலை, கலாச்சாரங்கள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும்.

பல நூற்றாண்டுகாலமாக அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கு நாம் அடிமைகளாக இருந்து வந்துள்ளோம். இன்றும் நாம் அடிமைகளே. இதன் காரணமாக எமது கலை கலாச்சாரங்களை உரிய முறையில் எம்மால் வளர்க்க முடியவில்லை.

எங்களுக்கும் ஒரு காலம் வரும். அதுவரை நாமும் பொறுத்திருப்போம்.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும் பேசினார்.

(கொ-இ)

## தாலிக்கொடி...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

திருட்டு நடைபெற்ற வீட்டிற்கு சுமார் 200 யார் தொலைவில் உள்ள ஒரு வீட்டிற்குச் சென்ற 'றெக்ஸ்' வீட்டில் உள்ள ஆர். சுந்தரலிங்கம் என்பவரை மோப்பம் பிடித்ததாம்,

காங்கேசன்துறைப் பொலிசார் சந்தேகநபரை கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். (கொ)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள HONDA CB 350 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. புதிய பற்றரியும் இரு கண்ணாடிகளும் உண்டு. தொடர்பு கொள்ளவும். சாந்தி ரயர் வேக்ஸ், 218/2 முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8085 5494

## மற்றுமொரு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கல் [illegible] சபையினால் பராமரிக்கப்படும் யாழ்ப்பாணத்திலுள்ள நீர் வழங்கல்திட்டங்கள் அமெரிக்க நிபுணர்களுக்கு காண்பிக்கப்பட்டு அங்குள்ள பிரச்சினைகளும் அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட இருதிட்டங்களையும் வகுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடும் பொருட்டு மேமாதம் முதல்வாரத்தில் மேலும் ஒரு அமெரிக்க நிபுணர் குழுவொன்று, யாழ் பிரதேசத்திற்கு விஜயம்செய்து நீர்வழங்கல் திட்டங்களை வகுப்பதில் ஈடுபடும். (வெ)

## படப்பிடிப்பு

வெளி நாட்டைச் சேர்ந்த டெலிவிஷன் படப்பிடிப்பாளர்கள் மன்னார்மாவட்டத்தில் டெலிவிஷனில் படம் பிடித்து வருகின்றனர்.

மத்திய கிழக்கு நாடுகளில்
வேலை வாய்ப்பு

- சாரதிகள் (முஸ்லீம்கள் விரும்பத்தக்கது)
- சமையலாட்கள்
- கூலியாட்கள்
- தச்சுத்தொழிலாளர்கள்
- மேசன்மார்

பாஸ்போட், புகைப்படப் பிரதிகள், நற்சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் நேரில் வரவும்

GRANDMET CEYLON LTD.
297, Galle Road, (Upper Floor)
Colombo - 3
Labour Licence: 379
5489

# மரண அறிவித்தல்

## தம்பையா ஐயாத்துரை

நாரந்தனை வடக்கைச் சேர்ந்தவரும், தற்போது 12, விநாயகர் வீதி, கண்டுக்குளி வாசியுமான ஓய்வு பெற்ற பொதுச் சுகாதார பரிசோதகர் தம்பையா ஐயாத்துரை காலமானார். இவர் காலஞ்சென்ற டராசக்தியின் அன்புக்கணவரும், ஈஸ்வரி (ஆங்கில ஆசிரியை செட்டிபாளையம் ம. வித்தியாலயம்), ஐயா சச்சிதானந்தம் (ஈழநாடு லிமிட்.) ஸ்ரீ சாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும்; தொழிலதிபர் நாகலிங்கத்தின் அன்புச் சகோதரருமாவர். அன்னாரது தகனக் கிரியைகள் இன்று [16-4-80] புதன்கிழமை காலை 10 மணிக்கு கொழும்புத்துறை துண்டிமயானத்தில் இடம்பெறும். 5490

# மரண அறிவித்தல்

## செல்வரஞ்சிதம் செல்வநாயகம்

செல்வரஞ்சிதம் செல்வநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியை கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்) காலமானார் இவர் தேவகுமாரின் (பெருந்தெருக்கள் திணைக்களம், பூநகரி) அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. திருமதி செல்வநாயகத்தின் அருமை மகளும், இரட்ணபூபதியின் பெருமகளும், செல்வமணி, செல்வமலர், செல்வராஜா, செல்வபூபதி, செல்வமகேஸ்வரி, செல்வராணி, S. K செல்வநாயகம் (கனடா) சரோஜா, காலஞ்சென்ற தெய்வேந்திரா ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை (17-4-80) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் சென் ஜேம்ஸ் சேமக்காலையில் நடைபெறும்.

பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

5495

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post Office Sri Lanka under No. QD/90/78 The Eelanaadu, Post Box No 49, Telegram 'Eelanaadu'
தொலைபேசி 889

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org